பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 18 திங்கட்கிழமை (31.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :66

# பொதுக் கட்டமைப்பினை இறுதி செய்வதில் இழுபறி

## வடிவம், அதிகாரம் இரண்டிலும் அரசு - புலிகள் விடாப்பிடி நிலை

கொழும்பு, ஜனவரி 31

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்கு சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படுவதில் முட்டுக்கட்டை நிலை உருவாகியுள்ளது.**

**அந்தப் பொதுக் கட்டமைப்பின் அதிகாரங்கள் மற்றும் வடிவம் ஆகிய விடயங்களை இறுதி செய்வதிலேயே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.**

இரு தரப்புமே இது விடயத்தில் தங்கள் நிலைப்பாட்டில் விடாப்பிடியாகவும் உறுதியாகவும் நிற்கின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கோட்பாட்டிலும் அடிப்படை விடயங்களிலும் இரு தரப்பிற்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டதால். பொதுக் கட்டமைப்பு உருவாகும் சாத்தியம் மேலோங்கியுள்ளதாகக் கணிப்பிடப்பட்டது. ஆனால், அந்தக் கட்டமைப்பை இறுதி செய்வதில் இழுபறி ஏற்பட்டிருப்பதாக இப்போது தெரியவந்திருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களுக்குப் புறம்பாக ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பாக தங்களுக்குள் பேசவும் உடன்பாடு காணவும் அரசும்

(02ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

கொழும்பு.ஜன.31

நீர்கொழும்பில் தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சூட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நீர்கொழும்பு ஏத்துகால என்ற இடத்தில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்தவர் எனக் கருதப்படுபவரான பெனடிக்ட் நீகன் (வயது-23) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் தங்கியிருந்த நீர்கொழும்பு ஏத்துகால பகுதியில் உள்ள வீட்டுக்குள் புகுந்த இரண்டு ஆயுததாரிகள் பெனடிக்ட் நீகனை வீட்டுக்கு வெளியே அழைத்துவந்து சுட்டுக்கொலை செய்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று நீர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. மாவட்ட அபிவிருத்தி குறித்து நேற்றுக் கலந்துரையாடல்

கிளிநொச்சி.ஜன.31

சுனாமியால் பாதிப்படைந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிரு திப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு தேசிய எழுச்சிப் பேரவையினரால் நேற்று நடத்தப்பட்டது.

மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இவ்வாண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிகளில் அவர்களுடன் இணைந்தே புனரமைப்பு உதவிப் பணிகள்

### அரசின் முடிவில் மாற்றமில்லை என்கிறார் நீதி அமைச்சர்

கொழும்பு.ஜன.31

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் புனரமைப்புப் பணிகள் புலிகளின் ஒத்துழைப்புடன், அவர்களுடன் இணைந்தே செயற்படுத்தப்படும். அவர்களின் பங்களிப்பு இல்லாமல் அங்கு எத்தகைய பணிகளையும் மேற்கொள்ளமுடியாது. புலிகளின் பங்களிப்புடன்தான் அப்பிரதேசங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது என்ற அரசின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என அடித்துக்கூறுகின்றார் நீதி அமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் செனவிரத்தன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்தாலும் அங்கு வாழ்பவர்களும் இந்நாட்டுப் பிரஜைகளே. அவர்களை எம்மால் புறக்கணிக்க முடியாது. புலிகளுடன் இணைந்து செயற்படாவிட்டால் அப்பிரதேச மக்கள் பட்டினிக் கொடுமையால் பாதிக்கப்படுவதையும் தடுக்கமுடியாது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் புலிகளுடன் இணைந்து செயற்படக்கூடாது என ஜே.வி.பி

(02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வந்த பொருள்களை விடுவிப்பதற்கு இணக்கம்

கொழும்பு.ஜன.31

வெளிநாட்டிலிருந்து எடுத்துவரப்பட்ட சமயம் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருள்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வெளிநாட்டிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருள்கள் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

வெளிநாடுகளிலிருந்து நிவாரணப் பொருள்களைக் கொண்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நிறுவனங்களின் பெயர்களை நிலையப் பதிவுப் புத்தகத்தில் உள்நாட்டு அமைச்சின் ஊடாகப் பதிவு செய்ய வேண்டும் என ஒரு விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெயர் அந்தப்பட்டியலில் இடம்பெற்றிருக்கவில்லை. இதனால் அந்த நிறுவனத்துக்கு விமானமூலம் எடுத்துவரப்பட்ட நிவாரணப் பொருள்களை விமான நிலைய அதிகாரிகள் தடுத்துவைத்திருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ். வருகை தந்த கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஜி.பியசேன திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம். இதுதொடர்பான செய்திகள் 2ஆம், 16ஆம் பக்கங்களில்.

## அரசில் இருந்து விலக ஜே.வி.பி. முடிவு?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் தேர்தல் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு மதிப்பளிக்காத அரசில் இருந்து விகை ஜே.வி.பியின் மத்திய குழு முடிவெடுத்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் ஊகம் தெரிவித்துள்ளன.

- இவ்வாறு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தான்தோன்றித்தனமாக எடுக்கும் முடிவுகளுக்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைக்கப்போவதில்லை. இது பற்றி விரைவில் பொதுமக்களுக்கு அறிவிக்க ஜே.வி.பி.யின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இதுபற்றி ஊடகங்களுக்கு தெரிவிக்க ஜே.வி.பி. முடிவெடுத்திருந்தபோதும், பின்னர் அது கைவிடப்பட்டது.

எனினும் அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஊடகங்களுக்கான அறிவித்தலை விரைவில் வெளியிட முடிவெடுத்து இருப்பதாகவும் இவ்வாறான ஒரு பத்திரிகையாளர் மாநாடு ஆட்சி அமைக்கப்பட்ட ஒன்பது மாதங்களில் ஜே.வி.பி.யினால் கூட்டப்படும் முதலாவது மாநாடாகவும் இருக்கும் எனவும் தெரியவருகின்றது.

அண்மைக் காலங்களில் ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கைகளில் அரசு கையாளும் முறைகளை வன்மையாகக் கண்டித்து வருவதும் அரசினால் நிவாரண நடவடிக்கைகளுக்கென ஏற்படுத்தப்பட்ட உயர்மட்டக் குழுவில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பினை எதிர்த்து வருவதும் குறிப்பிடத்தக்கது. என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## மாற்றத்துக்குப் பதிலாக நெருக்கடியையே அரசியலில் ஆழிப்பேரலை ஏற்படுத்தியுள்ளது

### பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கோருகின்றார் பிரதமர்

கொழும்பு.ஜன.31

ஆழிப்பேரலை இலங்கை அரசியலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அது மேலும் நெருக்கடியையே தோற்றுவித்துள்ளது. பிரதான பிரச்சினைக்கு முதலில் சமாதான ரீதியில் தீர்வுகாணப்படல் வேண்டும்.

- இப்படிக் கூறுகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடந்த வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் நாடு ஒரு யுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக பல தரப்பிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அந்த நிலை இப்போது முற்றுமுழுவதுமாக மாறிவிட்டது. இருப்பினும் சமாதான முன்னெடுப்புகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுத்த அனைத்துத் தரப்பும் முன்வரவேண்டும்.

ஆழிப்பேரலை அனர்த்தம் எமக்கு ஒரு படிப்பினையைத் தந்துவிட்டுச் சென்றுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிஸ்ரலுடன் தமிழ் இளைஞர் கைது!

பதுளை பஸ் நிலையத்தில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் புலிகளின் பிஸ்ரல் குழு உறுப்பினராக இருக்கலாம் என பொலீஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் பதுளை பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடிக்கொண்டிருந்தபோதே இவர் கைது செய்யப்பட்டார் என்று பொலீஸார் கூறினர்.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து கடந்த ஒரு வாரமாக சிவில் உடையில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலீஸாரே இவரைக் கைதுசெய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட இளைஞரிடமிருந்து சீனாவில் தயாரிக்கப்பட்ட 9 எம்.எம்.ரக துப்பாகியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

பதுளை, எலதமுவ என்ற இடத்தில் வசிக்கும் மேற்படி இளைஞர் மட்டக்களப்பில் நீண்டகாலத் தொடர்பை வைத்திருந்தார் எனப் பொலீஸார் தெரிவித்தனர். விசாரணைகளில் முக்கிய தகவல்கள் எதுவும் கிடைக்காதபோதும் மேற்படி இளைஞர் புலிகளின் பிஸ்ரல் குழு உறுப்பினராக இருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

பதுளை நீதிமன்ற நீதிவானிடம் ஆஜர் செய்யப்பட்ட மேற்படி இளைஞர் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

(க-10)

# மகாத்மா காந்தியின் 56ஆவது நினைவு தினம் குடாநாட்டில் நேற்று விசேட நிகழ்வுகள்

நல்லூர்,ஜன.31

மகாத்மா காந்தியின் 56 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடைபெற்றன.

நேற்றுமுற்பகல் 11 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் சே.க.தம்பிப்பிள்ளை, மில்க்வைற் அதிபர் இ.தவகோபால் ஆகியோர் மலர் மாலைகளை அணிவித்தனர்.

தொடர்ந்து காந்தி சேவா சங்கத்தின் உறுப்பினர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

மாலை நிகழ்வுகள் 3 மணியளவில் கந்தர் மடம் வேதாந்த மடத்தில் காந்தி சேவா சங்கத்தின் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றன. இதில் 'மகாத்மா காந்தி அடிகளின் தத்துவார்த்த கல்வியியற் சிந்தனைகளும் பிரயோகங்களும்' என்ற தலைப்பில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். பின்னர் காந்தீயம் மலர் 19 - இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது.

(எ-111)

# வலி.வடக்கு மீனவர்களை இடைக்காட்டில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

## அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை

வடமராட்சி,ஜன.31

வடமராட்சி வடக்குப் பிரதேச கரையோரங்களில் தற்காலிக குடிசைகளை அமைத்துக் கடற்றொழிலில் ஈடுபட்டுவந்த வலி.வடக்குப் பிரதேச மீனவர்களை இடைக்காடு, வளலாய் ஆகிய பகுதிகளில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஜி.பியசேனவிடம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தினர் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகள் தொடர்பாக ஆராயப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவேண்டிய நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன், திணைக்களத்தின் மேற்படி யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(10-173-203)

# இறுதி மரியாதைக்கு விடுப்பு வழங்குவதில் பாரபட்சம்

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம்.ஜன.31

யாழ். பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் காலத்தில் மரணிக்கும் பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு இறுதி மரியாதை செலுத்தும் நடைமுறைகளில் பாரபட்சம் இடம்பெறுகின்றன என ஊழியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் ஆட்சேபனை அறிக்கை ஒன்றை அவர்கள் வழங்கியுள்ளனர்.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழகத்தின் ஊழியர்கள் இறக்கும்போது அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்த விடுப்பு வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கப்படும் விடுப்பில் பாரபட்சம் இடம்பெறுகின்றது. சிலருக்கு ஒருநாளும் சிலருக்கு அரை நாளும் விடுப்பு வழங்கப்படுகின்றது.

ஒருவருக்குகொருவர் இந்த இறப்பு விடுப்பு மாறுபட்டுக் கொண்டே செல்கின்றது. இது சிலரைப் புறக்கணிப்பதாகவே தென்படுகின்றது - என்றுள்ளது.

(3-203)

# வலுவிழந்தோருக்கு இலவசச் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் இலவச சிகிச்சை நிலையத்தினால் பிரதி புதன்கிழமை தோறும் வலுவிழந்தோருக்கான சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் நாளை மறுதினம் தொடக்கம் புதன்கிழமை தோறும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணி வரையும் இல.100, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

(10)

# பொது மண்டபத் திறப்பு விழா

வரணி,ஜன.31

இடைக்குறிச்சி - வரணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொது மண்டபத் திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நியாப் பிரதித் திட்டப் பணிப்பாளர் சு.பாலகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதரம்பரநாதன், ந.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் கலந்துகொள்வர்.

(10-170)

# சுகாதார அமைச்சு முன் நாளை ஊழியர் சங்கம் 'பிக்கெட்டிங்'!

கொழும்பு,ஜன.31

சுகாதார ஊழியர் சங்கம் சுகாதார அமைச்சின் முன் நாளை செவ்வாய்க்கிழமை 'பிக்கெட்டிங்' போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

அரச ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட 2,500 ரூபா சம்பள உயர்வை ஒரே தடவையில் வழங்கக் கோரியே இந்தப் பிக்கெட்டிங் போராட்டம் நடத்தப்படவுள்ளது என சுகாதார ஊழியர்கள் சங்கத்தின் பேச்சாளரான சமன் தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சுகாதார சேவை ஊழியர்கள் சங்கம் சுகாதார அமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென உயர் மட்ட அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இக்குழுவினர் ஜனவரி 28ஆம் திகதிக்கு முன்பாகத் தமது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், இன்றுவரை அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இது உயர் அதிகாரிகளின் திட்டமிடப்பட்ட சதி - எனவும் சங்கப் பேச்சாளர் கூறினார்.

நாளை சுகாதார அமைச்சின் முன் பகல் 12 மணிமுதல் ஒருமணிநேரம் ஆயிரம் ஊழியர்கள் வரை 'பிக்கெட்டிங்'கில் கலந்துகொள்வார்கள். சரியான ஒரு முடிவு கிடைக்காவிட்டால் அடுத்த போராட்டம் தொடர்பாக 52 சுகாதார தொழிற் சங்கங்கள் கூடி அன்று மாலையே தீர்மானிக்கும் என சமன் தேசப்பிரிய மேலும் தெரிவித்தார்.

(க-10)

# பொதுக் கட்டமைப்பினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் அமைப்பும் இணங்கியிருந்தன.

அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும், மீள் கட்டுமானப் பணியை இணைந்து செய்யவும் இரு தரப்பும் முன்வரவேண்டும் என்றும் உதவும் நாடுகள் சமூகம் இரு தரப்புக்குமே அழுத்தம் கொடுத்த பின்னணியில் இவ்விடயம் குறித்து கலந்துரையாட இரு தரப்பும் இணங்கின.

கொழும்பிலும், கிளிநொச்சியிலும் உள்ள தத்தமது சமாதானச் செயலகங்கள் மூலம் இவ்விவகாரம் குறித்துப் பேசவும் -

அந்தப் பேச்சுக்களில் இணக்க நிலை எட்டப்படும்வரை பேச்சுக்களின் விவரங்களை வெளியிடாமல் பேணவும் இரு தரப்பும் உடன்பட்டிருந்தன.

அரசுத் தரப்பின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் கலாநிதி ஜெயந்த தனபால, ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் ஆகியோரும்-

விடுதலைப் புலிகள் தரப்பில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், சிரான் பணிப்பாளர், இரேனியஸ் செல்வின் ஆகியோரும் -

இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றினர் எனத் தெரிகின்றது.

இந்தப் பேச்சுக்களுக்கு சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் சார்பில் அதன் கொழும்புக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் அனுசரணையாளராகப் பணியாற்றினார்; பணியாற்றுகிறார். இதுவரை மொத்தம் ஏழு சுற்றுப் பேச்சுக்கள் நடந்துள்ளன எனக் கூறப்பட்டது.

இணக்கம் காணப்படவேண்டிய பொதுக் கட்டமைப்பின் வடிவம் மற்றும் அதிகாரங்கள் குறித்தே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

### வடிவத்தில் பிரச்சினை

தமிழர் தாயத்தில் ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்பு, நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு பொறுப்பாக அமைக்கப்படும் கட்டமைப்பு பதினொரு உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும் என்ற யோசனையை இரு தரப்பினருமே பொதுவாக ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிகின்றது.

இந்தப் பதினொரு பேரில் அறுவர் தமிழர்களாகவும் (புலிகளால் நியமிக்கப்படுபவர்களாகவும்) ஏனைய ஐவரில் (அரசுத் தரப்பினால் நியமிக்கப்படுவர்களில்) மூவர் முஸ்லிம்களாகவும், இருவர் சிங்களவர்களாகவும் இருக்கலாம் என்று புலிகள் வலியுறுத்துகின்றனர்.

ஆனால் புலிகளால் நியமிக்கப்படும் ஐவருக்கும் அரசுத் தரப்பால் நியமிக்கப்படும் ஐவருக்கும் (மூன்று முஸ்லிம்கள் மற்றும் இரண்டு சிங்களவர்கள்) மேலதிகமாக ஜனாதிபதியினால் அந்தப் பொதுக் கட்டமைப்பின் நிறைவேற்று அதிகாரியாக ஒருவர் நியமிக்கப்படலாம் என்பது அரசுத் தரப்பின் வாதம். அதில் அரசுத் தரப்பு பிடிவாதமாகவும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

### அதிகாரச் சிக்கல்

தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிவாரணப் பணியைப் பொறுப்பேற்கும் பொதுக் கட்டமைப்பின் அதிகாரம் குறித்து வரையறை செய்வதிலும் இரு தரப்பினருக்கும் இடையில் பெரிய இழுபறி நிலவுகின்றது.

இந்தப் பொதுக் கட்டமைப்பின் செயற்பாட்டில் இலங்கை அரசின் திறைசேரியின் அதிகாரமோ, மேலாணையோ, செல்வாக்கோ இருக்கக்கூடாது என்பது புலிகளின் உறுதியான நிலைப்பாடு.

அப்படியான ஏற்பாடு அரசமைப்பை மீறிய விவகாரம் என்று தெரிவித்து அதற்கு உடன்பட முடியாத என்கிறது அரசுத் தரப்பு.

மேற்படி பொதுக் கட்டமைப்புக்கு இரண்டு வழிகளில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க முடியும். ஒன்று - சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தினால் வழங்குவது. மற்றது - ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பங்கிட்டு ஒப்படைப்பதன் மூலம் வழங்குவது.

இந்த இரண்டு வழிகளில் முதலாவது வழி மூலம் - நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் சட்டத்தின் வாயிலாக - இந்தப் பொதுக் கட்டமைப்புக்கு அதிகாரத்தை வழங்குவது உடனடியாகச் சாத்தியமுடையதல்ல என்கிறது அரசுத் தரப்பு.

அந்த வழியில் முயற்சியை முன்னெடுப்பதிலும் இக்கட்டுகள், இடைஞ்சல்கள் உள்ளன. பேரினவாத சக்திகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்கவும் இவ்விகாரம் குறித்து அவை நாடாளுமன்றில் குரல் எழுப்பி குழப்பம் பண்ணவும் இந்த வழிமுறை வாய்ப்பை ஏற்படுத்திவிடும்.

ஆகவே இந்த வழிமுறையைக் கைவிட்டு ஜனாதிபதி தமது நிறைவேற்று அதிகாரத்தை தமிழர் பிரதேச விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பொதுக் கட்டமைப்புக்குக் கணிசமான அளவில் வழங்குவதன் மூலம் அந்தக் கட்டமைப்பை செயல்திறனுடைய தாக்கலாம் என்கிறது அரசுத் தரப்பு.

அப்படிச் செய்வதற்கு - ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பகிர்ந்து வழங்குவதற்கு - அவரால் பெயர் குறிப்பிட்டு அறிவிக்கப்படுபவரை நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கவேண்டியது அவசியம் எனவும் -

சம்பந்தப்பட்ட பொதுக்கட்டமைப்பின் ஏனைய பத்து உறுப்பினர்களும் குழுவாக இயங்கி அவர் மூலம் தமது செயற்பாட்டை நடைமுறைப் படுத்தலாம் எனவும் - அரசுத் தரப்பில் வாதிக்கப்படுகின்றது.

அத்தகைய அதிகாரியும் திறைசேரி இணக்கமும் - ஒப்புதலும் - இன்றி அரசுக்கும் நாட்டுக்கும் கிடைக்கும் சர்வதேச உதவிகளை செலவிடமுடியாது எனவும் -

அப்படிச் செய்வது அரசமைப்புக்கு முரணானது எனவும் - அரசுத் தரப்பு சுட்டிக்காட்டுகின்றது.

ஆனால் இத்தகைய யோசனைக்கு உடன்படப் புலிகள் மறுத்துவருகின்றனர்.

இதனால் பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் அரசுத் தரப்புக்கும் புலிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படாமல் இழுபறி நிலை உருவாகியுள்ளது.

என்றாலும் இவ்விவகாரம் குறித்துத் தொடர்ந்து கலந்துரையாட இரு தரப்பும் உறுதி பூண்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

(எ-க)

# புலிகளின் பகுதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் ஆட்சேபனை தெரிவிப்பதில் எந்த நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை - என்றும் நீதி அமைச்சர் கூறுகின்றார்.

அரசின் கூட்டாளிக் கட்சியான ஜே.வி.பியினர் அண்மைக்காலங்களில் அரசுக்கு எதிராக பல்வேறு விமர்சனங்களைத் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பற்றி மிகவும் மோசமான வகையில் விமர்சித்து வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கவோ அல்லது ஜனாதிபதியைப் பாதுகாக்கவோ சுதந்திரக் கட்சி முன்வராதது ஏன் என அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் -

உண்மைதான், ஜே.வி.பி. சிரேஷ்ட தலைவர்கள் உட்பட அமைச்சரவையில் இருக்கும் அவர்களின் அமைச்சர்களும் அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக விமர்சனம் செய்துவருகின்றனர். பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க உரிய இடங்கள் இருக்கின்றன. பொது இடங்களிலும், பொது நிர்வாகக் குழுக் கூட்டங்களிலும் எதிர்ப்பாக விமர்சனம் செய்வது ஜே.வி.பி., - ஸ்ரீல.சு.க. கூட்டுப் பொறுப்பைக் கீழ்நிலைப் படுத்தி நிர்மூலமாக்கும் ஒரு செயலாகும். இதனை நாம் அவதானமாகக் கவனித்து வருகின்றோம். ஜே.வி.பி. செய்வதையே சு.கட்சி திருப்பிச் செய்யவிரும்பவில்லை - என்றார்.

கட்சிக்குள் முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் ஏற்படுவது இயற்கை. அதைப் பேசித் தீர்க்கமுடியும். இப்போது எதிர்க்கட்சிக்குள்ளும் பாரிய கருத்து மோதல்கள் இருந்து வருகின்றன. அவை வெளிப்படையாகவும் விமர்சிக்கப்படுகின்றன. அதைத் தவிர்க்கமுடியாது.

உட்கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்படும்போது ஒருவர் மீது ஒருவர் விமர்சனம் செய்வதால் உறவுகள் மேலும் சீர்கெடும். இதனால்தான் ஸ்ரீல.சு.கட்சி மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றது. இதனை எமது பலவீனமாக எடைபோட்டு விடக்கூடாது என்று மேலும் கூறினார் அமைச்சர் செனவிரத்ன.

வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக விநியோகிக்கப்படவில்லை. பாரபட்சம் காட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. இதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள் என அவரிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகைதந்த வெளிநாட்டுத் தலைவர்கள் நாம் மேற்கொண்டுவரும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகத் திருப்பி தெரிவித்துள்ளனர்.

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைத்துச் செயற்பட அரசு முன்வந்துள்ளது. அதற்கான இணக்கமும் ஏற்பட்டுள்ளது - என்றார் நீதி அமைச்சர்.

அரசின் இத்திட்டதை உங்கள் பங்காளிகளான ஜே.வி.பியினர் அடியோடு எதிர்க்கின்றனர். எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போகின்றார்கள் எனவும் கூறுகின்றனர். உங்களுடைய நிலைப்பாடு என்ன என்று செய்தியாளர் நீதியமைச்சரிடம் கேட்டார்.

ஜே.வி.பியினரின் கூற்றில் எந்தவிதமான நியாயமும் இருப்பதாகத் தெரிவில்லை. அரசின் நிலைப்பாட்டிலும் மாற்றமில்லை. ஆழிப்பேரலை ஏற்பட்டபின் முதல் முறையாகக் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் புலிகள் கலந்து கொண்டனர். அவர்களுடைய் கோரிக்கையின் பேரில் பல்வேறு நிவாரணப் பொருள்கள் அவர்கள் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாகப் புலிகளுடன் பேசி வருகின்றோம். அதில் சாதகநிலை ஏற்பட்டுள்ளது - என்று அமைச்சர் [illegible] தெரிவித்தார்.

(எ-3-10-13)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# உதவும் நாடுகளின் தார்மீகக் கடமை

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தீவுக்குச் சர்வதேச சமூகம் அனுதாபத்துடனும், பரிவுடனும் வழங்கும் பெரும்தொகை நிதி உதவியை இங்கு பயன்படுத்துவதற்கான பொதுவான - உடன்பாடான - கட்டமைப்பு இன்னும் வடிவம் பெறவில்லை. அதற்கான முயற்சிகள் இணக்கமின்றி இழுபறி நிலையில் தொடர்கின்றன.

தமிழர் தரப்பின் நியாயமான நிலைப்பாட்டைப் புரிந்துகொண்டு, அரசுத் தரப்பு இறங்கி வருமானால் இணக்கத்தை எட்டுவதில் சுணக்கம் ஏற்படாது.

அரசுத் தரப்பு இறங்கி வருவதற்குப் பிரதான முட்டுக்கட்டை ஜே.வி.பி. என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இந்த முயற்சியில் முட்டுக்கட்டை எது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

பௌத்த, சிங்கள மேலாண்மை வாதத்திலும், பேரினவாதத்திலும் ஊறித் திளைத்த ஜே.வி.பி., ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்கும் விவகாரத்தையும் பேரினவாதக் கண் கொண்டே - இனவாதப் போக்குடனேயே - பார்க்கின்றது.

தனது கூட்டமைப்பு அணியிலுள்ள பிரதான பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஜே.வி.பியின் பௌத்த, சிங்கள மேலாதிக்கப் பிடியிலிருந்து இலங்கை அரசு விடுபட்டு, அனர்த்த நிவாரணப் பணிகளை அது நியாயமான முறையில் முன்னெடுக்கவேண்டும். அதை உறுதிப்படுத்த வேண்டிய தார்மீகக் கடமையும், சர்வதேசப் பொறுப்பும் உதவும் நாடுகளுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை அவை நிறைவேற்ற வேண்டுமானால் - அதை உணர்ந்துகொள்ள வேண்டுமானால் - இரண்டு அடிப்படை விடயங்களை அவை புரிந்து கொள்வது அவசியமாகும்.

முதலாவது - இலங்கைத் தீவில் சிறுபான்மையினரான தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக அரசியல், வாழ்வுரிமை அடக்குமுறைகள் கடந்த ஐந்து தசாப்த காலத்துக்கு மேலாகப் பேரினவாதிகளினால் கட்டவிழ்த்து விடப்பட்டு வந்திருக்கின்றன என்ற யதார்த்த நிலைமை.

தனித்தேசிய இனம் என்ற முறையில் அரசியல் உரிமைகளுக்காகவும், இருப்புக்காகவும், கௌரவ வாழ்வுக்காகவும் கடந்த ஐந்து தசாப்தகாலமாக அஹிம்சை வழியிலும், ஆயுத முறையிலும் போராடி வரும் ஈழத்தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாசைகள் நிறைவு செய்யப்படவில்லை. மாறாக, ஆயுத முனையில் - அதிகார வழியில் - அவர்களது அரசியல் உரிமைகள் தொடக்கம் குடியிருப்பு நிலங்கள் வரை திட்டமிட்டுப் பறிக்கப்பட்டன. மூன்றாந்தரப் பிரஜைகளாக - அடிமைகளாக - நடத்தப்பட்டு அவர்கள் ஒடுக்கப்பட்டனர். கல்வித்துறை முதல் வேலைவாய்ப்புகள் வரை பல துறைகளிலும் அவர்களுக்கு நியாயம் மறுக்கப்பட்டது. சிங்கள இராணுவ ஆதிக்கத்தினால் அவர்களது மண் பறிக்கப்பட்டது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அவர்களின் காலங்காலமான வாழ்விடங்கள் - தாயகப் பிரதேசங்கள் - கபளீகரம் செய்யப்பட்டன.

இவ்வாறு தேசிய ரீதியில் திட்டமிடப்பட்டு, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, யுத்தத்தின் பெயரால் பேரழிவுகளைச் சந்தித்து வரும் ஒரு சிறுபான்மை இனம், இந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கும் சேர்த்து சர்வதேசம் வழங்கும் அனர்த்த நிவாரண நிதி, அந்த இனத்திற்குச் சரியாகப் பகிரப்பட்டு, வழங்கப்படும் என்பதில் பலத்த சந்தேகம் நிலவுகின்றது. - இது முதலாவது அம்சம்.

இரண்டாவது - இலங்கைத் தீவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு, தெற்கு கரையோரப் பிரதேசங்களில் கணிசமான பகுதி - பேரழிவுகளைச் சந்தித்த பெருளமவு பிராந்தியம் - இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இல்லை; மாறாக, ஈழத்தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில்தான் அவை உள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்கென சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகள் உரியமுறையில் நியாயமான வகையில் - பங்கிடப்பட்டால், அதில் பெரும் பகுதியைச் செலவிட வேண்டிய உரிமையுள்ள பிரதேசம் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் - நிர்வாகத்தில் - இல்லை.

இந்த யதார்த்தப் புறநிலைகளை உதவி வழங்கும் சர்வதேச சமூகம் சரிவரப் புரிந்துகொள்ளுமானால் -

"ஒரு நாட்டின் அரசுக்குத்தான் உதவி; அரசின் ஊடாகத்தான் நிவாரணத் திட்டங்கள்" - என்று அவை! தத்துவம் 'பேசிக் கொண்டிருக்கமாட்டா'; அரசும், புலிகளும் இணக்கமான பொதுக்கட்டமைப்புக்கு - உடன்பாட்டுக்கு - வருவது சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கு முக்கியமானது என்று ஒருசிலவரி அறிக்கைகளை ஒப்புக்கு வெளியிட்டுவிட்டு அவை வாளா இருக்கமாட்டா.

அறிக்கைகள், அறிவிப்புகள், 'தத்துவங்கள்' போன்றவற்றுக்கு அப்பால், இணக்க நிலையை ஏற்படுத்துவதற்கு - அதற்குத் தடையாகக் குறுக்கே நிற்கும் ஜே.வி.பி. பேரினவாதத்தைப் புறந்தள்ளி நியாயமான முறையில் இலங்கை அரசைச் செயற்பட வைப்பதற்கு - காத்திரமாகச் செயற்படவும், நடவடிக்கைகளை எடுக்கவும் உதவும் நாடுகள் சமூகமும், சர்வதேசமும் முன்வரவேண்டும். அது அவற்றின் முக்கிய கடமையும்கூட.

# கிழக்கில் மறுவாழ்வுத்திட்டம் இல்லை விளம்பரம் தேடும் பணியே நடக்கிறது

## அங்கு சென்று திரும்பிய தமிழர் புனர்வாழ்வுக்கழகப்பணிப்பாளர் கூறுகிறார்

கிளிநொச்சி.ஜன.31

கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு எந்த விதத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சுனாமியை வைத்து விளம்பரம் தேடும் பணிதான் அங்கு நடக்கின்றது.

- இப்படிக் கூறுகின்றார் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிர்வாகப் பணிப்பாளர் றெஜி.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்காகச் சென்று நேற்று முன்தினம் திரும்பிய அவர் தற்போதைய நிலை குறித்து உதயனுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கழகப் பிரதிநிதிகளுடன் அம்பாறை, மட்டக்களப்புப் பகுதிக்கு ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டேன். அங்கு பாதிக்கப்பட்ட மக்களின் நிலை மிகவும் கவலைக்குரியது.

அவர்களுக்கு அரச நிவாரணமாக அரிசி, சீனி, பருப்பு போன்றவை வழங்கப்படுகின்றன. ஆனால், அவற்றைச் சமைத்துச் சாப்பிட வேறுபொருள்கள் அவர்களிடம் இல்லை. இதனால் நிவாரணப் பொருள்களை அரைகுறை விலைக்கு விற்று அரைகுறைச்சாப்பாட்டை அவர்கள் உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவர்கள் மீள் குடியமர எந்தவகையான ஏற்பாடுகளோ செயற்பாடுகளோ மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் பாடசாலைகளிலேயே தொடர்ந்தும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீளக்குடியமர்த்த காணி பெறுவதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அவர்களுக்குக் கூடாரங்கள் வழங்கப்படுகின்றன. அங்கு தற்போதுள்ள சுவாத்திய நிலையில் இந்தக் கூடாரங்களில் மக்கள் வாழ முடியாது.



இதைக்கருத்தில் கொண்டு கூடாரங்கள் வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நாம் கலந்துரையாடினோம். நாம் தெரிவித்த காரணங்களை ஏற்றுக் கொண்ட அவர்கள், சுவாத்திய நிலைக்கு ஏற்ப வீடு அமைக்க இணங்கியுள்ளனர். அங்குள்ள மக்களின் மனநிலையைத் தேற்றுவதற்காகப் படங்கள் காட்டுகின்ற சில நிறுவனங்கள், அவை உளவியல் ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்தும் படங்களுக்குப்பதிலாக சினிமாப்படங்களையே காட்டுகின்றன.

வேறு சில நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கான பிரசாரங்களை முகாம்களில் நடத்துகின்றனர். சில நிறுவனங்கள் தம்மை விளம்பரப்படுத்தும் வகையில் நிவாரணப்பொருள்களை வழங்குகின்றன. மொத்தத்தில் சுனாமி வியாபாரமாக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு எதுவும் நடக்கவில்லை என்றார் - அவர். (3)

# பனம்பழத்தில் பாளை; சில்லாலையில் அதிசயம்!

பனை மரத்தில் இருந்து விழுந்த பனம் பழத்தில் ஆண்பாளையும் பெண்பாளையும் முளைத்திருந்த அதிசய சம்பவம் சில்லாலை சாந்தைக் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது. அங்குள்ள பனை மரம் ஒன்றில் இருந்து நிலத்தில் விழுந்த பனம் பழத்தில் மூன்று அங்குல நீளத்திற்கு ஆண் பாளையும், பெண்பாளையும் முளை விட்டிருந்தன.

தற்போதுபண்டத்தரிப்புப் பனைதென்னை வள அபிவிருத்திச்சங்க அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்த அதிசய பனம் பழத்தை மக்கள் பலரும் நேரில் சென்று பார்வையிட்டு அதிசயிக்கின்றனர். (த-135)

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் துணிவு ஜனாதிபதிக்கு இன்னமும் வரவில்லை

## இப்படிக் கூறுகின்றார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு.ஜன.31

தமிழ் மக்களின் பரச்சினைக்குத் தீர்வு காணும் துணிவு இன்னமும் ஜனாதிபதிக்கு வரவில்லை என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

"சுனாமியின் பின் சமாதானத்தின் எதிர்காலம்" என்ற தலைப்பில் கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் நடந்த செயலமர்வில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அரசமைப்பு விவகார நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் நடந்த இச்செயலமர்வில் பௌத்த பிக்குகள், புத்திஜீவிகள், பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் என 150இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 40 வருடங்களாகத் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசுகள் கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாதத்திற்குத் தமிழ்மக்கள் பாதிக்கப்பட்டனர். இன்னமும்தமிழ்மக்கள் அகதிமுகாம்களில் உள்ளனர். இங்கு மட்டுமல்லாமல் இந்தியாவிலும் அகதி முகாம்களில் எமது மக்கள் உள்ளனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பழகிப் போன வாழ்க்கையாக அது அமைந்து விட்டது.

சுனாமியால் சகல இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்வாழ்வு அளிக்கும்போது சகல மக்களுக்கும் நன்மை கிட்டும் என அரசு கூறுவது வேடிக்கையாக உள்ளது.

சுனாமிவந்துதான் மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று இல்லை. அதற்கு முன்பே சகல இன மக்களும் ஒன்றுபட்டு வாழ்ந்திருந்தால், நாடு நல்ல முன்னேற்றம் கண்டிருக்கும். எதிர்மாறாக, தமிழ் மக்களைகீழ்க் கீரையாகச் சிங்கள மக்களும் அரசும் நடத்தியதால்தான் ஒற்றுமை என்ற அர்த்தம் தமிழ் மக்களுக்குப் புரியவில்லை.



எதிர்காலத்தில் ஜனாதிபதி பதவியில் எவ்வாறு நீடிப்பது அல்லது எவ்வாறு பிரதமராக வருவது என்பதில் அக்கறை கொண்டு அதற்கான காய்நகர்த்தலையே மேற்கொள்கிறார்.

உண்மையில் இதய சுத்தியுடன் தமிழ்ப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர் விரும்பினால் இவற்றுக்கு எல்லாம் தடையாக இருக்கும் ஜே.வி.பியினருக்கு அடிபணியாது துணிந்து செயற்பட முன்வர வேண்டும். அப்போதுதான் ஜனாதிபதியின் உண்மைத்தன்மையைப் புரிய முடியும்.

குறுகிய அரசியல் வட்டத்துக்குள் நின்று செயற்படாமல் பரந்த மனப்பான்மையுடன் செயற்பட அவர் முன்வந்தால், நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்; சமாதானமும் மலரும்; நாடும் நிம்மதியடையும் - எனறார் அவர். (3)

# சுனாமியால் ஏற்பட்ட விவசாய அழிவுகள்: விவரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.31

யாழ். மாவட்டத்தில் நடந்த சுனாமி அழிவினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விவரங்களைத் திரட்டுவதற்கு யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். விவசாயபீட உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று இந்த விவரங்களைத் திரட்டவுள்ளனர்.

இவர்களால் விவசாயிகளிடம் இருந்து பயிர் அழிவுகள், கால்நடை இழப்புக்கள் ஏனைய வீவசாய இழப்புக்கள் மற்றும் நீர்ப்பாசனக் கிணறுகள் சேதம், உப்பு நீரினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் தொடர்பான விவரங்கள் என்பன திரட்டப்படவுள்ளன.

இதற்கென விவசாயபீட உத்தியோகத்தர்கள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 4மணிவரை பருத்தித்துறை இன்பருட்டியில் உள்ள எரிந்த அம்மன் கோயிலடியிலும் -

நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 4மணிவரையும் பருத்தித்துறை வியாபாரி மூலையில் உள்ள பழைய உரக்களஞ்சியத்திலும் வைத்து விவசாயிகளை நேரில் சந்திக்கவுள்ளனர். எனவே, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும் அன்றைய தினங்களில் தவறாது சமூகம் தந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(த-203)

### நாளை

தை 19
செவ்வாய்க்கிழமை
(01.02.2005)
திதி : ஸப்தமி
முன்னிரவு 09.12 வரை
நட்சத்திரம் : சித்திரை
காலை 10.05 வரை
[illegible]
[illegible]
(யாவும் பழையநேரப்படி)

# சிறுமிக்கு நச்சுக் காய்ச்சல்

யாழ். போதனா வைத்தியசாலையில் 'வார்டி'ல் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த மாதகல் வடக்கைச் சேர்ந்த 13வயது சிறுமிக்கு நச்சுக்காய்ச்சல் (Typhus Fever) நோய் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பப் பரிசோதனைகளில் இருந்து கண்டறியப் பட்டுள்ளது.

தற்போது வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குச் சென்றுள்ள இச்சிறுமி பற்றி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரத் பரிசோதகர் பிரஸ்தாப சிறுமியின் வீட்டுக்கு நேற்று சென்று நோய்த்தடுப்பு நடவடிக்கையினை மேற்கொண்டார்; சுகாதார ஆலோசனைகளையும் வழங்கினார். இதேவேளை, மேலதிக இரத்தப் பரிசோதனைக்காக இவரது மாதிரி இரத்தம் எடுக்கப்பட்டு கொழும்பிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (M.R.I) அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-135)

### உதயவாக்கு

[illegible] எப்பொழுதும் ஆயத்தமாயிரு. அப்பொழுது வாழ்க்கையோ இறப்போ இனிமை பொருந்தியதாயிருக்கும். - ஷேக்ஸ்பியர்.

# ஐ.ஐ.எஸ்.கணனி நிறுவனத்தின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்.மணிக்கூட்டுவீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.எஸ்.நிறுவனத்தின் 9ஆவது ஆண்டுநிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் சென்ஜோன்ஸ் கல்லூரி ஜுபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், கடந்த கல்வியாண்டில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற செல்வி சுபாஜினி இராஜதுரைக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளதுடன் சிறப்புச் சித்தியெய்திய மாணவர்களான யோ.உமா, வை.தர்சினி, சூரியகுமார், பொன்னையா குருசங்கர், சந்திரமோகன் ஜெயராம், சா.அச்சுதா, த.நிந்துஜா ஆகிய மாணவர்களுக்குச் சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (த-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கில் 58லட்சம் செலவில் 12 வீதிகள் புனரமைக்கப்படும்

அச்சுவேலி,ஜன.31

வலி.கிழக்கு பிரதேச சபையினால் 58லட்சம் ரூபா செலவில் 12 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச சபையின்கீழ் செயற்படும் கோப்பாய் உப அலுவலக பிரிவில் 3 வீதிகளும், புத்தூர் உப அலுவலகப் பிரிவில் 4 வீதிகளும் நீர்வேலி உப அலுவலகப் பிரிவில் ஒரு வீதியும், உரும்பிராய் உப அலுவலகப் பிரிவில் 3 வீதிகளும், அச்சுவேலி உப அலுவலகப் பிரிவில் ஒரு வீதியும் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

கோப்பாய் கிராம சபை வீதி 3லட்சம் ரூபா செலவிலும், கோப்பாய் பெரியபுலம் வீதி 4லட்சம் ரூபா செலவிலும், புத்தூர் 9ஆம் கட்டை வீதி 4லட்சம் ரூபா செலவிலும், புத்தூர் புள்ளணர்குளம் வீதி 9லட்சம் ரூபா செலவிலும்-

புத்தூர் கவடி எல்லை வீதி 8லட்சம் ரூபா செலவிலும், நீர்வேலி மோதிரர்கேணி வீதி 9லட்சம் ரூபா செலவிலும், உரும்பிராய் தெற்கு முருகன் கோயில் வீதி 4லட்சம் ரூபா செலவீலும், உரும்பிராய் கிழக்கு தம்பசிட்டி வீதி 6லட்சம் ரூபா செலவிலும் -

உரும்பிராய் கிழக்கு சாத்தாப்புலம் வீதி 3லட்சம் ரூபா செலவிலும், கோப்பாய் வீரபத்திரர் கோயில் வீதி 4லட்சம் ரூபா செலவிலும், அச்சுவேலி காலாணை வீதி 8லட்சம் ரூபா செலவிலும் வாதரவத்தை வீரவாணி இணைப்பு வீதி 4லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன எனக் கூறப்பட்டது. வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் இ.இராசதுரை வீதிகள் திருத்த வேலைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (எ-11)

# பொத்துவிலில் புத்தர் சிலையை நிறுவ ஜே.வி.பியினர் முயற்சி

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

பொத்துவில் பகுதியில் புத்தரின் சிலையினை நிறுவுவதற்கு ஜே.வி.பியினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்மக்களும், முஸ்லிம் மக்களும் செறிந்து வாழ்கின்ற பொத்துவில் பகுதியில் புத்தர் சிலையொன்றினை நிறுவுவதன் மூலம் அப்பகுதியில் பதற்றத்தை உண்டு பண்ண ஜே.வி.பியினர் முனைவதாகவும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக, ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமி அனர்த்தம் நடைபெற்றுள்ள இப்பகுதியில் ஜே.வி.பி. திடீரென புத்தர் சிலையினை அமைக்கவென்று திட்டம் தீட்டுவது மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளினால் நாட்டில் மேன்மேலும் இனப்பிரச்சினை பூதாகாரமாக வெடிக்குமே தவிர ஒரு சுமுகத் தீர்வை எட்டமுடியாது - என்றார். (த-13)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் தளபாடங்கள் வழங்கப்பட்டன

வரணி,ஜன.31

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் சாவகச்சேரி பிரதேச சபை ஊடாக வழங்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் ஆகியவற்றிற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்களை வழங்கும் நிகழ்வுகள் கடந்த 19 ஆம் திகதி பிரதேச சபை புதிய மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.

பிரதேச சபைச் செயலாளர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாவகச்சேரி வணிக மன்றத் தலைவர் டாக்டர் அருளானந்தம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். சனசமூக நிலையப் பிரதிநிதிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர். (த-170)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்லூரியின் அண்மைக்கால வரலாற்றிலே க.பொ.த (சா/த) பரீட்சையில் அனைத்துப்பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று சாதனை படைத்த எமது மாணவமணியை, கல்லூரியின் அதிபர தினமாகிய இன்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

செல்வன்
இ.கோகுல்நாத்
க.பொ.த (சா/த) 2003 - 10 A

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்சங்கம், தர்மகர்த்தாசபை,
யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்.



## கணக்குப் பதியுநர் தேவை

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள 'ரஞ்சன் ஸ்ரோர்ஸ்' நிறுவனத்திற்கு கணக்குப் பதியுநர் ஒருவர் தேவை.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை முகாமையாளர் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. அத்துடன், சங்கானை பிரதேசத்திற்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் தொடர்புகொள்ளவும்.

ரஞ்சன் ஸ்ரோர்ஸ்,
பிரதான வீதி,
சங்கானை.

இ.ரஞ்சன்
உரிமையாளர்.

(41489)(26-14-45)


## கண்ணீர் அஞ்சலி

யா/செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை தரம் பத்து மாணவி

**செல்வி பாஸ்கரன் தனுஷா**

அன்னாரது தந்தையான

**தங்கராசா பாஸ்கரன் (பாபு)**

ஆகியோர் (26-01-2004) அகால மரணமடைந்தமையையொட்டி எமது பாடசாலைச் சமூகம் தமது கண்ணீர் அஞ்சலிகளைத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்குக் காணிக்கையாக்குகின்றது. இருவரதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா. அபிவிருத்திச் சங்கம்.

செம்பியன்பற்று.
(சி-40725)(26-14-45)

### நவாலியில் திருட்டு மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஜன.31

நவாலி வடக்கு - அட்டகிரி வீதியில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தினமும் இரவு 7மணிக்குப் பின்னர் திருட்டுத்தனமாக அப்பகுதியில் உள்ள மக்கள் மின் இணைப்பைப் பெறுவதால் சட்ட ரீதியாக மின் பெறுவோருக்கு வலுக்குறைந்த மின் விநியோகமே கிடைக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-185)

### இல்ல மெய்வன்மைப் போட்டி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கலவிக் கோட்ட பணிப்பாளர் க.தனபாலசிங்கம், மானிப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (த-135)

### நெடுந்தீவுக்கு நன்னடத்தை உத்தியோகத்தர் நியமனம்

நெடுந்தீவு,ஜன.31

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தின்கீழ் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவிற்கு கடந்த 26 ஆம் திகதி முதல் நன்நடத்தை உத்தியோகத்தர் ஒருவர் வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (த-112)

### பண்டத்தரிப்புச் சங்கத்தில் கோதுமை மா விநியோகம்

வலி.தென்மேற்கு,ஜன.31

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்கக் கிளைகள் ஊடாக குடும்ப பங்கீட்டு அட்டைக்கு தலா 3கிலோ கோதுமை மாவை விநியோகம் செய்துவருகின்றது.

ஒரு கிலோ மா 30 ரூபா வீதம் விற்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-135)


**Personal Class**

புதிய மென்பொருள்களுடன்
புதிய தொழில்நுட்ப வளர்ச்சியில்

தொடர்புகளுக்கு: 077 - 6914059



26.01.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300017823 இலிருந்து 300036483 வரை

சீட்டிழுப்பு இல. 1577

**23 33 38 47** சுப்பர் எண் **16**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.57,60,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெறறோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 57,60,200/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 34 | 5,000/- | 1,70,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 498 | 1,000/- | 4,98,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,660 | 500/- | 8,30,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 24,244 | 40/- | 9,69,760/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,969 | 20/- | 4,59,380/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,45,430 | 10/- | 34,54,300/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.88,81,440/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 66,83,200/-

300021114-2-04
300031492-8-96
300034429-0-59
300019157-7-17
300026506-1-45

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ருக்குமணிதேவி தங்கறட்ணம்



(உடுவில்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணி தேவி தங்கறட்ணம் நேற்று (30-01-2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம் - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகளும் தங்கறட்ணத்தின் (சாந்தலிங்கப் பக்தர் & சண்ஸ், உடுவில்) அன்பு மனைவியும் குகதாஸ் (தர்மி வீடியோ, உடுவில்), மகேந்திரராஜா (மகேந்திரராஜா ஜுவலறி, உடுவில்), நிர்மலாதேவி, லோகராஜா (ஆசிரியர், யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை), குமாரராஜா (சண் ஜுவலறி, உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீரோகினி, பிரியதர்சினி, ரட்ணசங்கர் (ராசரத்தினப் பதத்ர் & சண்ஸ், இணுவில்), உஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்மி, திவ்யா, லக்சிகா, சஞ்சீவன், மதுரகீதன், சந்தோஷ், பகுசனறாஜ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-01-2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக மதியம் 12 மணிக்கு பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் வீதி, உடுவில்,
சுன்னாகம்.
(41490) (26-14-45)

தகவல்:
தங்கறட்ணப் பத்தர்
(கணவர்).

### திருமதி அன்னம்மா காசிப்பிள்ளை



(சங்கானை)

அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி அன்னம்மா காசிப்பிள்ளை 20-01-2005 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி காசிப்பிளளையின (பிரபல வர்த்தகர், சங்கானை) அன்பு மனைவியும் அருளம்பலம் (அருள் ஆனந்த புடைவை நிலையம், சங்கானை), பரமானந்தம் (காசிப்பிள்ளை அன் சன்ஸ், சங்கானை), மனோன்மணி, பரஞ்சோதி (காசிப்பிள்ளை அன் சன்ஸ்), ஜெகதேவி, இராசலட்சுமி, மகேஸ்வரன் (சரண்யா தொலைத்தொடர்பு நிலையம், சங்கானை), கலாஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பாதேவி, தனலட்சுமி, சிவசுப்பிரமணியம் (லீலா வெதுப்பகம், சங்கானை), அன்னபூரணம், சோதிலிங்கம், இரத்தினேஸ்வரன் (அதிபர், பண்ணாகம் வடக்கு அமி.த.க.பாடசாலை), வசந்தாதேவி, குணசிங்கம் (முகாமையாளர், வர்த்தகவங்கி, நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி விஜிதா பாலகருணா, கீர்த்திகா, நிறைஞ்சன் (கொழும்பு), நிசந்தி (கனடா), நிரஞ்சினி, திருமதி மைதிலி ஹரிகரன் (ஆசிரியை, பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), சுரேந்திரன் (லீலா வெதுப்பகம், சங்கானை), நக்கீரன் (வரகேசரி, கொழும்பு), தினேஷ்குமார், கோகுலன் (சங்கானை சிவபிரகாச ம.வி.), நிசாந்தன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஜெயானந்தன் (ஆசிரியர், முருங்கன் ம.வி.), சுகிர்தராஜ் (மஸ்கன்ஸ், கொழும்பு), சிந்துபாரதி (வட்டு.இந்துக்கல்லூரி, சித்தன்கேணி), மதுன்ராஜ் (சிவப்பிரகாச ம.வி., சங்கானை), சரண்யா, சஜிலைசா (இருவரும் உடுவில் மகளிர் கல்லூரி), ஸ்ரீராம் (சென்.ஜோன்ஸ், யாழ்ப்பாணம்), தர்ஷிகா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-01-2005) திங்கட்கிழமை காலை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி வீதி, சங்கானை.*
(சி40723)(46-14-45-26)

தகவல்:
கா.பரமானந்தம (மகன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அலையில் அள்ளுண்ட ஏழு மாதக் குழந்தை வலையில் சிக்குண்டு உயிர் தப்பிய அதிசயம்!

## முல்லைத்தீவில் சுனாமி தாக்கியவேளை!

சுனாமி பேரலை ஏற்பட்டவேளை அதில் சிக்குண்டு தெய்வாதீனமாக - அபூர்வமாகப் பலரும் உயிர்தப்பிய சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் அவ்வப்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அவ்வாறானதோர் அதிசய சம்பவம்தான் இதுவும். முல்லைத்தீவில் கடற்கரையோரம் வாழ்ந்து வந்தது ஒரு நடுத்தரக் குடும்பம். கணவன் மனைவிக்கு 3 பிள்ளைகள். இளைய மகன் டிலான். வயது 7 மாதங்கள் தான்

அன்று காலை...

பேரிரைச்சலுடன் வந்த சுனாமி பேரலைகள் அந்தப் பகுதியையே துவம்சம் செய்து கொண்டிருந்தன.




தலைக்கு மேல் எழுந்துவந்த கடல் நீர் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்று வயது பேதம் பாராது அனைவரையுமே தனக்கு இரையாக்கிக் கொண்டிருந்தது.

இந்த அலையில் 7 மாதங்களே நிரம்பிய பச்சிளம் பாலகனான டிலானும் அடித்துச் செல்லப்பட்டான்.

அலைகளுடன் அள்ளுண்ட பலர் கடலுக்குள் அமிழ்ந்துபோயினர். வேறு பலர் நீண்ட தூரத்துக்கு அப்பால் வாரிச் சுருட்டிப் போடப் பட்டனர்; பிணங்களாக!

இவர்களைப் போலவே டிலானையும் பேரலை கடலுக்குள் உருட்டிச் சென்றது. அவ்வாறு உருட்டிச் செல்லப்பட்டவேளையில் தென்னைமரம் ஒன்றில் சிக்குண்டு போய்க் கிடந்த மீன்பிடி வலைகளுக் குள் டிலானும் ஒரு சிறு மீன்குஞ்சைப் போல சிக்குண்டு போனான். இதனால் கடல்நீரால் தொடர்ந்து டிலானைத் தன்னுடன் கொண்டுசெல்ல முடியாமல் போய் விட்டது.

அனர்த்தம் இடம்பெற்றதைக் கேள்வியுற்றதும் கடற்புலிகளும் பொதுமக்களும் அவ்விடத்துக்கு ஓடிவந்து இடிபாடுகளுக்கு மத்தியில் குற்றுயிரும் குலை உயிருமாய்க் கிடந்த பலரை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர்.

அப்போதுதான், வலையில் சிக்குண்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த டிலானை மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞன் ஒருவன் கண்டான்.

உடனடியாக வலையின் சிக்கிலிருந்து டிலானை மீட்ட அந்த இளைஞன், டிலானுக்கு உயிர் இருப்பதை உணர்ந்துகொண்டு விரைந்து செயற்பட்டான்.

அங்கிருந்து அவசர அவசரமாக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட டிலான் வைத்தியர்களின் தீவிர முயற்சியின் பலனாக உயிர்பிழைத்தான். இப்போது டிலான் தனது உறவினர்களுடன் முல்லைத்தீவிலுள்ள நலன் புரி நிலையம் ஒன்றில் ஆரோக்கியமாக இருக்கிறான்.

மெய்சிலிர்க்க வைத்த இந்தப் பச்சிளம் பாலகனின் கதையைக் கூறியவர், டிலானைத் தற்போது பராமரித்து வரும் அவனது பெரியம்மா.

புருவங்களை மேலுயர்த்தி ஆச்சரியத்துடன் அந்தச் சம்பவத்தைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவரது கதையின் இறுதியில் கண்கள் கலங்கிய நிலையில் கூறிய வார்த்தை என்னை அதிர்ச்சியில் உறைய வைத்தது; எனது நெஞ்சைக் கனக்கவைத்தது.

டிலான்ர தாய், தகப்பன் இரண்டு அக்காமார் எல்லோரும் போய்ச்சேர்ந்திடினம்... இவனை மட்டும் தப்ப வைச்ச கடவுள் இவன்ரை உறவுகள் ஒன்றையுமே விட்டுவைக்கவேயில்லை...

அப்போது டிலானைத் திரும்பிப் பார்த்தேன். அழுதுகொண்டிருந்தான். பெற்றோரையும் சகோதரிகளையும் பறிகொடுத்த சோகத்தில் அல்ல; பசியில்...!

**வாசகர்களுக்கு...!**

**சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இழக்கப்பட்டவர்கள் தொடர்பான இத்தகைய மெய்சிலிர்க்கவைக்கும் அதிசயம் நிறைந்த 'கதைகள்' உதயனில் தொடர்ந்து வெளிவரும்.**

**இயற்கையின் சீற்றம் மனிதனை எவ்வாறு பாதிப்புறச் செய்யும், நட்டமுறச் செய்யும் என்பதற்கு சான்று பகரும் பல நிகழ்வுகள் சம்பந்தப்பட்டவர்களுடனே அடங்கிப் போகாமல் மற்றவர்களுக்கும் - எமது வாசகர்களுக்கும் - தெரிந்தாக வேண்டும் என்பதற்காகவே இந்தத் தொடர். இது காலத்தைப்பதிவு செய்யும் ஒரு பணியாகவும் அமையும்.**

**இத்தகைய நிகழ்வுகள் ஏதேனும் உங்களுக்குத் தெரியவந்தால் எங்களுக்கு அறியத்தாருங்கள். நேரில் சென்று சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து 'கதை'யாக்கிப் பதிவு செய்வோம்.**

**—ஆசிரியர்**

# ஓய்வுபெற்று ஏழு வருடங்கள் ஆனால் கொடுப்பனவு ஏதுமில்லை

## மனித உரிமை ஆணைக்குழுவில் அதிபர் ஒருவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.31

அதிபர் தரம் I இல் கடமைபுரிந்து ஓய்வு பெற்ற ஒருவருக்கு 7வருடங்களாகியும் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

அச்சுவேலி வடக்கு, சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரான சின்னத்துரை என்பவரே இவ்வாறு முறைப்பாட்டினைச் செய்துள்ளார்.

அதிபர் தரம் I இல் கடமையாற்றி 1998ஆம் ஆண்டு பதவியிலிருந்து ஓய்வுபெற்ற தனக்கு இதுவரைக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையென்றும்-

இதுதொடர்பாக உரிய அதிகாரிகளுக்கும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் முறைபாடு செய்யப்பட்டபோதிலும் அவர்கள் எது வித நடவடிக்கையினை எடுக்கவில்லையென்றும் - தெரிவித்து வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கும், யாழ்.கல்வி வலயத்திற்கும் எதிராகவே அவர் தனது முறைப்பாட்டினைச் செய்துள்ளார்.

இதுதொடர்பாக மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ் அலுவலக அரச திணைக்கள விசாரணை அதிகாரி ரி.சுரேந்திரன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

(3-13)

# 500 கூடாரங்களை பிரான்ஸ் அரசு வழங்கியது

சுனாமி இயற்கையனர்த்தத்தால் இடம் பெயர்ந்து வடமராட்சிப் பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு பிரான்ஸ் அரசு 500 கூடாரங்களை வழங்கியுள்ளது.

இந்தக் கூடாரங்களை பிரான்ஸ் அரசு, கீயூடெக் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

இந்தக் கூடாரங்கள் வடமராட்சிப் பகுதிப் பாடசாலை முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகக் கீயூடெக் நிறுவன இயக்குநர் ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்துள்ளார். (த-190)

# படகோட்டிகள் இருவர் நெடுந்தீவில் கௌரவிப்பு

நல்லூர்,ஜன.31

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை தனது 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது நெடுந்தீவு கடற்போக்குவரத்துச் சேவையில் நீண்டகாலத் தொடர்புகளையும் அனுபவங்களையும் பெற்றிருந்த அக்குவாட்டி நிறுவன அதிபர் ஆ.கந்தையா, பல நோ.கூ.சங்கப் படகின் ஓட்டுநர் இ.அருள்நாயகம் ஆகியோர் பொன்னாடை போர்த்து விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

யுத்த காலத்தில் யாழ். குடாநாட்டிலிருந்து தீவுப் பகுதி துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் நெடுந்தீவுக்கு அத்தியாவசிய பொருள்களை எடுத்து வருவதில் அரிய சேவைகளைத் தனியொருவராக இருந்து செயற்படுத்தி வந்தமைக்காகவும் துணிச்சலான கடலோடி என்பதற்காகவும் கந்தையாவுக்கும் -

கொந்தளிப்பான எந்தச் சமயத்திலும் பேரலைகளைத் துச்சமெனக் கருதித் தடங்கலற்ற சேவையை வழங்க உதவுபவர் என்பதனால் பல நோ.கூ. சங்கப் படகின் சாரதியான அருள் நாயகத்துக்கும் திருச்சபையின் சார்பில் கௌரவிப்பு அளிக்கப்படுவதாக ஜோண் செல்வம் அடிகளார் தெரிவித்தார்.

இவர்கள் இருவருக்கும் பேராசிரியர் அருட் திரு.ஜெபநேசன் அடிகளார் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திருமதி எற்வேட் பொன்னுத்துரை, திருமதி கனகராசா ஆகியோர் விருதுகளை வழங்கினர்.

கணனிப் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பேராயரால் வழங்கப்பட்டன.

நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ், தேசிய எழுச்சிப் பேரவையின் நெடுந்தீவுச் செயலாளர் எஸ். கணேசலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

(த-111)

# சமுர்த்தி அலுவலர்கள் விரைவில் கட்டாய இடமாற்றம் பெறுவர்

யாழ்ப்பாணம்,ஜன.31

சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் விரைவில் செய்யப்படவுள்ளனர்.

இதுதொடர்பான சுற்றறிக்கையொன்றினை இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஜி.மித்ரரத்ன சகல அரச அதிபர்களுக்கும், பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமுர்த்தி வங்கியில் மூன்று வருடங்களுக்கு மேல் கடமையாற்றியவர்களும் களத்தில் 5 வருடத்திற்கு மேல் கடமையாற்றியவர்களும் கட்டாய இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

மாவட்டத்துக்குள்ளேயே பிரதேச செயலகத்துக்குள்ளேயே இந்த இடமாற்றத்தை மேற்கொள்ளலாம். வங்கிச் சேவை வேலைத்திட்டங்கள் பாதிப்படையாமல் தொழிற்சங்கத்தின் கருத்தையும் உள்வாங்கி கட்டாய இடமாற்றத்தை மேற்கொள்ளவும் - என்று அதில் உள்ளது. (எ-175)

# விவேகானந்தர் ஜெயந்தி தினம்; பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழாவினையொட்டி குடாநாட்டில் பல்வேறு நிகழ்வுகளை நடத்த கொக்குவிலிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை காலை 7.30 மணியளவில் கொக்குவிலில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் பூசை வழிபாடுகளுடன் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ.சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'சுவாமி விவேகானந்தர் கூறும் அன்பு மதம்' என்ற தலைப்பில் ஸ்ரீ இராம கிருஷ்ணசேவாச்சிரம செயலாளர், சி.சிவமோகன் கருத்துரை வழங்குவார்.

அன்று பிற்பகல் 3.30மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் உப தலைவர் செ.செல்வராசா தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், சிறப்பு விருந்தினராக இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

"எழுந்திரு! விழித்துக்கொள்!" என்ற தலைப்பில் கண்காட்சியும், கருத்தரங்கும் யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மாவின் ஆசியுரை இடம்பெறும்.

எதிர்வரும் 4 ஆம்திகதி காலை 9 மணியளவில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் கல்லூரியின் அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் "இலவச புற்றுநோய் ஆலோசனை மருத்துவ முகாமும், கருத்தரங்கும்" யாழ்போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் நிபுணர் வைத்திய கலாநிதி ஜெயக்குமாரினால் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி வடமராட்சிப் பகுதியில் சுனாமியினால் உயிரிழந்தவர்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடமாடும் சிகிச்சை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3-13)




பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசு வழங்கிய உதவிப் பொருள்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருமதி நிருபமாராவ், பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தாவிடம் [illegible] படத்தில் காண்கிறீர்கள். யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி[illegible] (படம்: வடமராட்சிச் செய்தியாளர்).

# பயிற்சிக் கருத்தரங்கு

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று, நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கனடா வேதாந்த ஞானமன்றத்தினால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயிற்சி பெறவிரும்பும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் பங்கு பற்றிப் பயனடையுமாறும் அத்துடன் அறநெறிப் பாடசாலைகளில் கற்கவுள்ள புதிய ஆசிரியர்களும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழக் கல்விக் கழக யாழ். மாவட்ட பொறுப்பாளர் ஆர்வலன் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், சைவப் புலவர் ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளன், சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன், கலாநிதி அடியார் விபுலானந்தா ஆகியோர் விரிவுரைகளை ஆற்றவுள்ளனர். (த-203)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் சிறப்புற நடைபெற்ற திருச்சபையின் ஆண்டுநிறைவு விழா

நெடுந்தீவு,ஜன.31

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபையின் 150ஆவது ஆண்டு நிறைவுவிழா கடந்த வெள்ளிக் கிழமை மாலை சிறப்புற நடைபெற்றது.

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபையின் சபைக்குரு ஆர்.யோண் செல்வம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னிந்தியச் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் கலந்து கொண்டார்.

விழாவில் முதல நிகழ்வாக மாலை 3மணிக்கு விசேட நற்கருணை, நன்றி வழிபாடு என்பன இடம்பெற்றன.

இதனைத் தொடந்து 150ஆவது ஆண்டு நிறைவு நினைவுக் கல்லினை பேராயர் எஸ்.ஜெபநேசன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து மங்கள விளக்கினை நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு. எஸ்.செபநேசரட்ணம் ஏற்றிவைத்ததுடன், தென்னிந்திய திருசபையின் சமூக, சமயப் பணிகளைப் பாராட்டி வாழத்துரையும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

150ஆவது ஆண்டு நிறைவையொட்டி சபை மக்களால் வெளியிடப்பட்ட நிறைவு விழா மலருடன் இந்த வளாகத்தினுள் இயங்கிவரும் கணனிப் பயிற்சி மாணவர்களினால் உருவாக்கப்பட்ட 'நெடுந்தீவு பற்றி ஒரு நோக்கு' என்னும் நூலின் முதல் பிரதியையும் பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் வெளியிட்டு வைக்க ஓயவுபெற்ற கல்விப் பணிப்பாளா இரா.சின்னத்தம்பி அவற்றைப் பெற்றுக்கொண்டார். ஏனைய சிறப்புப் பிரதிகளை நெடுந்தீவிலுள்ள அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள் பெற்றுக்கொரண்டனர்.

நூல்களின் ஆய்வுரையை ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு கடற்போககுவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் 'அக்கு வாட்டிக்' படகு உரிமையாளரும் ஆர்.கந்தையாவும நெடுந்தீவு பல நோ.கூ.சங்க படகு ஓட்டுநர் இரா.அருள்நாயகமும் பேராயரினால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாகக் கடந்த வருடம் மார்ச் மாதம் இந்த வளாகத்தினுள் ஆரம்பிக்கப்பட்ட கணனி பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை நிறைவு செயத மாணவர்களுக்குப் பேராயரினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டனர். (எ-112)

# முதலாம் தர அனுமதி: அதிபருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.31

கொக்குவிலுள்ள பிரபல பாடசாலையில் தரம் ஒன்றிற்கான அனுமதி தனது மகனுக்கு வழங்கப்படவில்லையென்று தெரிவித்து தந்தை ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த த.மகேந்திரன் என்பவரே அந்தப் பாடசாலையின் அதிபருக்கு எதிராக முறைப்பாட்டினைச் செய்துள்ளார்.

பாடசாலைக்கு 500 மீற்றர் சமீபத்திலுள்ள நான், எனது பிள்ளையை குறிப்பிட்ட பாடசாலையில் தரம் ஒன்றிற்கான அனுமதிபெறச் சென்றவேளை அதிபரினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பாக யாழ். வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளரிடம் முறையிட்டபோது அவர் விடயத்தை விசாரணை செய்தபின்னர் தன்னுடைய பிள்ளையினைக் குறிப்பிட்ட பாடசாலையில் அனுமதிப்பதற்கான சிபார்சுக் கடிதமொன்றை என்னிடம் வழங்கி அதிபரிடம் கொடுக்குமாறு கூறினார்.

அக்கடிதத்தினை அதிபரிடம் கொடுத்த போதும் அவர் என்னுடைய மகனை பாடசாலையில் இணைத்துக் கொள்ளவில்லை என்றவாறாக மகேந்திரன் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் அரச திணைக்கள விசாரணை அதிகாரி ரி.சுரேந்திரன் விசாரணைகளை மேற கொண்டுள்ளார்.(3-13)

## தலைமன்னாருக்கு ஈழஅகதிகள் 12 பேர் வெள்ளியன்று வந்துசேர்ந்தனர்

மன்னார்,ஜன.31

ஈழஅகதிகள் 12பேர் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

இவர்களை மன்னார் பொலீஸார் கைது செயது மன்னார் சிறப்பு நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லா இவர்களைச சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். வவுனியா, திருகோணமலையைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (எ-13)

## இடுப்புப் பட்டிகளைக் கழற்றுமாறு வற்புறுத்திய படையினர் முகமாலையில் சனியன்று சம்பவம்

கிளிநொச்சி,ஜன.31

கிளிநொச்சியிலிருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பெண் போராளிகளின் இடுப்புப் பட்டிகளைக் கழற்றுமாறு முகமாலை சோதனைச் சாவடியில் இருந்த படையினர் வலியுறுத்தினர் என்று 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

நீண்ட நேரம் பெண் போராளிகளை விசாரணைக்கு உட்படுத்திய படையினர் பின்னர் யாழ். செல்ல அவர்களை அனுமதித்தனர் என்றும் - அதுமேலும் தெரிவித்தது. (எ-13)

## டைனமற் வெடித்து மீனவர் பரிதாப மரணம்!

மன்னார்,ஜன.31

மன்னார் வடகடலில் 'டைனமற்' பயன்படுத்தி மீன்பிடிக்க முயன்ற மீனவர் ஒருவர் அது திடீரென வெடித்ததில் அந்த இடத்திலேயே துடிதுடித்துப் பலியானார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரணைதீவினைச் சேர்ந்தவரும் மன்னார் ஓணத்தொடுவாயிலில் வசிததுவருபவருமான வெஸ்ரன் ஜெராட் (வயது29) என்பவரே உயிரிழந்தவராவார். (எ-13)

## காரைநகர் கிழக்கில் வீட்டு உடைமைகள் திருட்டு அதிகரிப்பு

காரைநகர்,ஜன.31

காரைநகர் கிழக்குப் பகுதியில் உள்ள ஆள்கள் அற்ற வீடுகளில் கதவு, ஜன்னல் மறறும் வீட்டுத் தளபாடங்கள் என்பன திருடப்பட்டு வருவது கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக இப்பகுதியில் உள்ள இருபத்தைந்திற்கும் மேற்பட்ட வீடுகளில் இருந்து இவ்வாறு கதவு, ஜன்னல், வீட்டுத் தளபாடங்கள் என்பன திருடப்பட்டுள்ளதாகக் காரைநகர் தென்கிழக்கு கிராம சேவையாளரிடமும் காரைநகர் பிரதேச செயலகத்திலும் இப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர். (எ-73)







உ

சிறுப்பிட்டி கிழக்கு

## அருள்மிகு ஞானவைரவர் ஆலய மஹாகும்பாபிஷேக விழா

இன்று (31.01.2005) திங்கட்கிழமை காலை 7.00 மணிமுதல் நண்பகல் 12.00மணி வரை குடமுழுக்கு நடைபெற்று, அதைத் தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெறும்.

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய

செஞ்சொற் செல்வர் ஆறு-திருமுருகன்
திரு-வே-சந்திரசேகரம்பிள்ளை (சிறுப்பிட்டி)
வைத்திய கலாநிதி சி-கதிரவேற்பிள்ளை

ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

அனைவரும் பங்குகொண்டு அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நில்வளை தோட்டம்.
சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

(41290)(42-14-26)

ச.முத்துதம்பி.

## அறைகள் வாடகைக்கு உண்டு

அமைதியான சூழலில் சகல வசதிகளும் கொண்ட அறைகள் மாத வாடகைக்கோ அல்லது தங்கிச் செல்வதற்கோ குறைந்த கட்டணத்தில் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

இல.75, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 6315971

(41461)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் வைகுந்தராஜா ரஜனிகாந்த்

[(B.Sc. (Com. Sc. special)]



கொழும்பு பல்கலைக்கழகத்தில்
இன்று 31-01-2005
B.Sc. (Com. Sc. special) பட்டத்தினைப் பெறும் இவரைப் பாராட்டி மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

திருநெல்வேலி
(மண்டைதீவு).

(41438)(46-19-15)

திரு-திருமதி நா.சிவகுருநாதன் குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அறிவித்தல்

யாழ்.மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று சித்தி அடைந்த, வேலை அற்று இருப்போர் மாவட்டக் கூட்டுறவுச் சபையுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

வீரசிங்கம் மண்டபம். (சி40712)(46-19-15) - செயலாளர்.

## தேவை

★ மருந்து விற்பனையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.
★ தாதிப் பயிற்சிபெற விரும்புவோர் நேரில் சமுகந்தரவும்.
★ நிர்வாகத் திறமையுள்ள, ஓரளவு படித்த, 35 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட, குடும்பப் பொறுப்பற்ற பெண் தேவை.
★ கணனி அறிவுள்ள கணக்கு லிகிதர் தேவை (A/L கல்வித் தகைமை விரும்பத்தக்கது).

சம்பந்தன் மொடேர்ன் கிளினிக்
08A, இராமையாச் செட்டியார் வேவ்,
அருள் மருத்துவ (வருவம்).
யாழ்ப்பாணம்.

(41469)(38-14-26)

## ஆறாம் ஆண்டினில் நெஞ்சம் சுமக்கும் நினைவலைகள்



அமரர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள் விஜயரட்ணக் குருக்கள்

(முன்னாள் பிரதமகுரு, புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்)

தாயின் மடியில் 24-11-1942
இறைவனடியில் 06-02-1999
திதி: 31-01-2005

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே!
அன்பால் அரவணைத்து, ஆதரவாய்
எமைக்காத்து, இல்லறத்தை நல்லறமாக்கி
இறைபணியில் சேவையாற்றி, எத்துன்பம் வரினும்
எமை ஏங்கவிடாமல் வாழவைத்தீர் ஐயா!
ஆயிரம் உறவுகள் புன்னகையையும் குரலையும் கேட்க
எங்கள் முன்னிலையில் வருவீர்களா ஐயா?
ஆறு ஆண்டு ஓடி மறைந்தாலும்
மறையாது ஐயா உங்கள் நினைவு!
பரமனருள் பெற்ற நும்மாத்மா சாந்தி பெற
பரமபதம் பணிந்து இறைஞ்சுகின்றோம் ஐயாவே!

கஜானன் தொலைத்தொடர்புசேவை.
"கீதா கோட்டம்",
புற்றளை பிள்ளையார் கோவிலடி.
புலோலி தெற்கு, புலோலி.
T.P.: 021 2263112.
(41456)(26-14)

என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: சந்திரகுமாரி,
மக்கள்: கீதா, பத்மபபிதா, ஆனந், பிரியா
மருமக்கள்: மாதவன், ஸ்ரீராஜ்குமார், தீபா,
பேரப்பிள்ளைகள்: கோபிகா, கீர்த்திகா, ஆர்த்தி
மற்றும சகோதரர்கள், பெறாமக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்சுகாதாரமும்

## பாடசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்களின் முக்கியத்துவமும்



"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பது பழமொழி "பொன் நகையைவிடச் சிறந்தது புன்னகை என்றும் புன்னகைக்குச் சிறந்ததோர் நகையும் இல்லை" என்பது இன்றைய புதுமொழி.

இத்தகைய புன்னகையைப்பெற நம் மனம் ஒருகாரணம் என்றால், நம் மனதை வெளிக்காட்டும் புன்னகை தரும் பற்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தனவாக இருக்கின்றன. பல் சீராக இருந்தால் மட்டுமே நம் புன்னகையிலும் ஒரு தன்னம்பிக்கை இருக்கும்.

ஒரு குழந்தை பிறந்து 6 மாதங்கள் முதல் 21/2 வயது வரையான காலப்பகுதியில் பாற் பற்கள் எனப்படும் நிலையற்ற பற்கள் உருவாகி முரசுக்கு வெளியே வருகின்றன. இவை பின்னர் நிலையான பற்கள் தோன்றும் போது விழுந்து நிலையான பற்கள் தோன்ற வழி விடுகின்றன. இந்நிலையான பற்களே வாழ்நாள் முழுவதும் நம்மோடு நிலைத்து நிற்பவை. எனவே, இவற்றில் ஏற்படும் இழப்பு அலலது பாதிப்பு வாழ்நாள் முழுவதும் நிரப்பப்படாத ஒன்றாக நம்மோடு நிலைத்துவிடக்கூடியன.

கூடுதலான பற் பாதிப்புக்கள் பள்ளிப்பராயத்தில் உள்ளவர்களிற்கும் வயது முதிர்ந்தவர்களுக்குமே ஏற்படுவதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. இதற்கு முக்கிய காரணங்களாகப் பற்சுகாதாரம் பற்றிய போதிய அக்கறையின்மையும் அறிவின்மையுமேயாகும் என்று அவ்வாராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

நாம் இங்கு பள்ளிப்பராயத்தில் ஏற்படும் பல் வியாதிகளைப் பற்றியும் அவற்றைத் தவிர்ப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றியும் இவற்றில் பாடசாலை பற்சிகிச்சை நிலையங்களின் பங்களிப்பு பற்றியும் மேலோட்டமாக பார்ப்போம்.

99% ஆன சிறுவர்கள் பாடசாலை நாள்களில் பின்வரும் பற் பிரச்சினைகளாலேயே பெரிதும் அவதியுறுகின்றனர்.

I) பற்சூத்தை (Dental Caries)

II) முரசு சம்மந்தப்பட்ட வியாதிகள் (Gum Diseases)

**பற்சூத்தை (Dental Caries)**

பற்சூத்தை / பற்சிதைவு எனப்படுவது நம் பற்களில் முக்கியமாகக் கடைவாய்பற்களில் உள்ள குழிகளில் (Pits and Fissures) மாப்பொருள் (காபோவைதரேற்று) உணவுத் துணிக்கைகள் தங்கிக்கொள்ளும் பட்சத்தில் சரியாக பல் துலக்கிச் சுத்தம் செய்யாமல் விடுவதால் முக்கியமாக வாயில் வசிக்கும் பக்ரீறியாக்களான 'ஸ்ரெப்ரோகொக்கஸ் மியூட்டன்ஸ்' (Steptococcus mutans) மற்றும் ஸ்ரபிலோகொக்கஸ் (Staphylococcus) என்பன அவ் மாப்பொருளுடன் சேர்ந்து லக்ரிக் அமிலம் (Lactic acid) என்ற அமிலத்தை உருவாக்குகின்றன. இந்த அமிலம் பற்களை அரித்து பற்சிதைவை ஏற்படுத்துகின்றது. இதுவே பற்சூத்தை எனப்படுவது.

இந்த அமிலம் பல்லின் எனாமலை (Enamel) முதலில் கரைந்து பின்னர் அடுத்த பகுதியான டென்டின் (Dentin) ஐயும் தாக்கி கரைக்கின்றது. இந்நிலையிலேயே முதலாவது அறிகுறிகளான கூச்சமும் வலியும் உண்டாகின்றன. இந்நிலையில் பற்சிதைவைப் பல் வைத்தியரின் உதவியைக் கொண்டு அடைத்துக்கொண்டால் பல்லை எளிதில் காப்பாற்றி விடலாம். அவ்வாறு செய்யத்தவறின் பல்சூத்தையானது மிளிரிக்கும் தாவி (Pulp) பல் கொதியை ஏற்படுத்தும். இந்நிலையில் பல்லை இழக்கவேண்டி நேரிடும்.

**ஞா.சுரேந்திரகுமார்**
**23ஆம் அணி மருத்துவ மாணவன்,**
**மருத்துவ பீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

இவை மாத்திரமன்றி உணவுத்துணிக்கைகள் (புரதம், கொழுப்பு, காபோவைதரேற்றுகள்) பக்ரீறியாவோடு சேர்வதனால் பிளாக் (Dental plaque) எனப்படும் ஒரு படிமானம் பற்களைச் சுற்றி உருவாகும். இந்த நிலையிலும் நாம் ஒழுங்காகப் பல்துலக்கிச் சுத்தம் செய்வதன் மூலம் இவற்றை அகற்றமுடியும். ஆனால், அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் இந்த பிளாக் எனப்படும் படிமானம் நாளடைவில் கல்சியம் கனியுப்பு சேர்வதால் இறுகி கட்டியாகும் (Culcfication). இதுவே பற்காவி (Tartar) எனப்படுவதாகும். இந்த tartar இல் இருக்கும் ஏராளமான பக்ரீறியாக்கள் தம் அன்றாட வாழ்வில் நச்சுத்தன்மையுடைய பொருள்களை வெளியேற்றுகின்றன. இதனாலேயே அடுத்த முக்கிய பிரச்சினையான முரசு வியாதிகள் பெரும்பாலும் தோன்றுகின்றன.

**முரசு சம்மந்தப்பட்ட வியாதிகள் (Gum Diseases)**

இவையும் பள்ளிப்பருவத்தில் பிள்ளைகளுககு ஏற்படும் பல் வியாதிகளில் முக்கியமானவையாகும். இதன் அறிகுறிகள் சிவந்த முரசு (Reddish gum), இரத்தக்கசிவு (Bleeding), காய்ச்சல் என்பனவாகும். இவை நான் மேலே கூறியபடி tartar நமது முரசை தாக்குவதாலும், பெண்பிள்ளைகள் பருவமடைந்த காலங்களில் ஏற்படும் திடீர் ஓமோன் மாற்றங்களாலும், விற்றமின் C பற்றாக்குறைவாலும் உண்டாகின்றன. பற்களை நன்கு துலக்கி ஆறு மாதங்களுக்கு ஒருதடவை பல் மருத்துவரிடம் பல்லை சுத்தம் (Scaling) செய்வதனாலும் அதிகளவு விற்றமின் C உள்ள பழங்களை அல்லது விற்றமின் C மாத்திரைகளை உட்கொள்வதாலும் தடுக்கலாம்.

இவற்றைவிட பள்ளி மாணாக்கர் தம் வாழ்நாளில் அரிதாகச் சந்திக்கக்கூடிய ஆனால், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பல் உடைவு (Dental trauma) என்பதும் முக்கியமான ஒன்றாகும். இது பொதுவாக விளையாட்டு மைதானங்களில் எதிர்பாராத விதமாக சில விபத்துக்களால் ஏற்படக்கூடிய ஒன்றாகும். பற்களில் அடிபட்டால் ஒன்றில் பல் உடையலாம் அல்லது முழுதாக வெளியே வரலாம். இதில் முதலாவதில் அவ்வளவு பிரச்சினை இல்லை. மீண்டும் செயற்கைக் கழி உடைந்த இடத்தில் பல்லின் உடைந்த பகுதி போன்று வடிவடைத்து ஒட்டிவிடலாம். முழுதாக வெளியே வந்த பல்லை 30 நிமிடத்திற்குள் பல் வைத்தியரிடம் கொண்டுசென்றால் எந்த இடத்தில் இருந்து கழன்று விழுந்ததோ அதே இடத்தில் மீண்டும் சிகிச்சைசெய்து பொருத்திவிடலாம். இதனால் இயற்கை பல்லே அமைந்துவிட வாய்ப்புக்கள் உண்டு. இது முக்கியமாக ஆசிரியர்கள் கவனிக்க வேண்டியதொன்று.




இவ்வாறு வெளியே வந்த பல்லைககழுவி அடிபட்டவாின் வாயிலேயே வைத்துக்கொள்ளச் சொல்லி எடுத்துச்செல்லாம். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது பல்லின் மேற்புறத்தை மட்டுமே பிடிக்கவேண்டும். கீழ்புறத்தைத் தொடக்கூடாது. பாலில் போட்டுக்கொண்டும் செல்லலாம்.

வாய் துர்நாற்றமும் (Halitosis) அநேகமான பள்ளிச் சிறார்களில் நாம் கவனிக்கக் கூடியதொன்று. இது அவர்கள் பற்களை நன்றாகச் சுத்தம் செய்யாமல் விடுவதால் பற்சூத்தை முரசு கரைதல் போன்ற வியாதிகளாலும் வாயில் ஈரத்தன்மை இல்லாதுபோவதாலும் ஏற்படும். மேலும் சில சமயங்களில் உள்ளுறுப்பு நோய்களாலும் ஏற்படலாம் (நுரையீரல் பிரச்சினை, ஈரல்பிரச்சினை) எனவே பல் மருத்துவரை அணுகி தக்ககாரணத்தைக் கண்டறிந்து சிகிச்சைபெறவேண்டும்.

மேலே கூறப்பட்ட முக்கியமான பிரச்சினைகளில் இருந்து பள்ளிச்சிறார்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு வசதியாக மாகாண சுகாதார திணைக்களங்கள் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் (MOH) உள்ள ஒரு பாடசாலையில், பாடசாலை பற்சிகிச்சை நிலையத்தை உருவாக்கி வைத்துள்ளன. இது நம்மில் பலருக்கும் தெரியாமல் இருப்பது வியப்புக்குரியதாகவே இருக்கின்றது. வடமாகாணத்தில் 5 (MOH) பிரிவுகளில் இவை சிறப்பா இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந் நி ங்களாவன யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொடிகாமம் சிவப்பிரகாசம் வித்தியாலயம் என்பனவாகும். மேலும் வேலணைப் பிரதேசத்திலும் கோண்டாவில் பிரதேசத்திலும் தகுந்த பாடசாலைக் கட்டடம் இல்லாத காரணத்தால் அப்பிரதேசங்களின் அரச மருந்தகமும் மகப்பேற்றுச் சிகிச்சை நிலையத்திலும் (CD & MH) இயங்கிக்கொண்டிருக்கின்றன.

பாடசாலை மாணவர்களது நலன் கருதி செயற்படும் இந்த இலவச சிகிச்சை நிலையங்கள் தினமும் காலை 8 மணிவரை மாலை 3 மணிவரை திறந்திருக்கின்றன. இவற்றில் நாம் மேற்கண்ட பிரச்சினைகளைச் சரிசெய்து கொள்ளமுடியும். அநாவசியமாக யாழ். போதனா வைத்தியசாலைப் பற்சிகிச்சை நிலையங்களிற்கோ தனியார் பற்சிகிச்சை நில்லையங்களிற்கோ அலைந்து திரிந்து உங்கள் நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை. எனவே, பாடசாலை மாணவர்கள் தங்கள் அருகாமையிலுள்ள ஏதாவது மேற்கூறிய பற்சிகிச்சை நிலையங்களிற்குச் சென்று உங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். ஒருகுழுவாகச் செல்லும் பட்சத்தில் உங்கள் பாடசாலை அதிபரின் கடிதம் ஒன்றுடன் சென்று விரைவாகச் சிகிச்சை பெற்று முடியும். இவ்விடயத்தைப் பள்ளி மாணவர்களிற்கு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களும் எடுத்துரைத்து அவர்கள் ஒழுங்காக சிகிச்சை நிலையங்கள் செல்வதை உறுதிப்படுத்தவேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரும் இச்சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வீணாகப் பொதுவைத்தியசாலைகளில் செலவழிக்கும் நேரத்தையும், தனியார் நிலையத்தில் கொடுக்கும் பணத்தையும் மீதப்படுத்திக் கொள்ளமுடியும்.

இவ்விடயத்தில் ஆசிரியர்களிற்கும் தார்மீக பொறுப்பு உண்டு. பொதுவாகப் பள்ளி மாணவர்கள் மத்தியில் ஆசிரியர் கூறும் அறிவுரைகளுக்குத் தனி மரியாதையும் பின்பற்றும் ஆர்வமும் அதிகம். எனவே, இதை ஆசிரியர்களும் சரிவர உணர்ந்து மாணவர்களிற்கு இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்திப் பற்சுகாதாரத்தைப் பேண வழிவகுக்க வேண்டும்.

"வாய் ஆரோக்கியம் முழுஉடல் ஆரோக்கியம்" (Oral health is total health) என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி.

எனவே, உங்கள் பற்களைப் பாதுகாத்து சரிவர பாடசாலை பற்சிகிச்சை நிலையங்களை உபயோகித்து ஆரோக்கியமான பிள்ளைகளாகவும் மனிதர்களாகவும் வாழுங்கள்.

*

## வடமராட்சிக் கடற்பகுதியில் மெல்லமெல்லக் கடற்றொழில் ஆரம்பம்

வடமராட்சி,ஜன.31

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் சொத்துகள், உடைமைகள், உயிரிழப்புகள், தொழில் வாய்ப்புகளை இழந்த தொண்டைமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான வடமராட்சி வடக்குப் பிரதேசத்திலும் மணல்காடு, குடத்தனைப் பகுதிகளைக் கொண்ட வடமராட்சி கிழக்கின் ஒரு பகுதியிலும் மெல்லமெல்ல கடற்றொழிலை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் கடற்றொழிலாளர் சங்க சமாசம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் தலைவர் க. சூரியகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். அவருக்குப் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் காட்டிவிட்டு அவரிடம் எமது உயிரிழப்பு, சொத்திழப்பு, உடைமை இழப்பு என்பனவற்றைத் தெரிவித்துவிட்டு, வடமராட்சி வடக்குக் கடற்பிரதேசத்திலும் வடமராட்சி கிழக்கிலுள்ள மணல்காடு, குடத்தனை கடல் பகுதியில் மீளவும் கடற்றொழில்களை ஆரம்பிப்பது பற்றி ஆலோசிப்போம்.

முதலில் மீனவர்களிடமுள்ள உடைந்த, பழுதடைந்த கட்டுமரங்களைத் திருத்தி சிறிய வலைகளை வீசித் தொழில்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்போம். தொடர்ந்து படகுகளில் சென்று தொழில்களைச் செய்யும் விதத்தில் கடற்றொழிலை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை, வடமராட்சி வடக்குக் கடற்பிரதேசத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில மீனவர்கள் வீச்சு வலைகளை வீசி மீன்பிடித்து வருகின்றார்கள். பருத்தித்துறை முனை, மூர்க்கம் ஆகிய இடங்களிலேயே இவ்வாறு வீச்சு வலைகள் மூலம் மீன்பிடிக்கப்பட்டு வருகிறது. (3-173)

## சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.31

பொது நிலையினர் திறமை தொடர்பாக நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் மற்றும் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்திசெய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் 9.30 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். குருமுதல்வர் நீக்கிலஸ் அடிகளார் கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் மறைக்கல்வி நடுநிலை இயக்குநர் மவுஸிஸ் அடிகளாரும் கலந்துகொண்டார். (த-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, மணிக்கூட்டுவீதியிலுள்ள அரசடி விநாயகர் ஆலயத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும் நூதன ராஜகோபுர கும்பாபிஷேகமும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.05 மணிமுதல் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் ஆரம்பமானது.

இன்று திங்கட்கிழமை விசேட பூசைகள் நடைபெற்று விநாயகர் திருவீதியுலா வருதல் இடம்பெறும். தொடர்ந்து 48 நாள்கள் மண்டல அபிஷேகம் நடைபெறவுள்ளது. (த-204)

## தற்போது கிடைக்கும் சர்வதேச ஆதரவை சமாதான முயற்சிக்குப் பயன்படுத்துவோம்

### பிரதமர் மஹிந்த ர்ராஜபக்ஷ அழைப்பு

கொழும்பு.ஜன.31

**சுனாமி அனர்த்தத்தின் பின்னர் எமக்குக் கிடைக்கும் சர்வதேச ஆதரவினை நாம் சமாதான முன்னெடுப்புகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.**

**- இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.**

"சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சமாதான முயற்சிகளின் எதிர்காலம்" என்ற பொருளில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சகல அரசியல், ஊடக, வர்த்தகத் தொழிற் சங்கக்குழுக்களுக்கும் மற்றும் சிவில் சமூகக் குழுக்களும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்குத் தம்மாலான பங்களிப்பினை வழங்கவேண்டும்.

சுனாமி பாதித்த குடும்பங்கள் உட்பட நாட்டிலுள்ள சகல இனமக்களும் நிலையான சமாதானத்தை விரும்புகின்றார்கள்.

எனவே, குறுகிய நோக்கத்தில் ஒருவர்மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதைத் தவிர்த்து ஆக்கபூர்வமான முறையில் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது - என்றார். (எ-13)



# யாழ்ப்பாணம் வண்ணா
# அரசடி விநாயகர் ஆலய புனராவர்த்த
# நூதன இராஜகோபுர கும்பாபி



## இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியம் தரும்செயல்

விநாயக அடியார்களே!

யாழ். வண்ணார்பண்ணை மணிக்கூட்டு வீதியில், அரசடியம்பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானின் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதனையிட்டுப் பெருமகிழ்வடைகின்றோம்.

விக்கினங்களைத் தீர்க்கவல்ல விநாயகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைத்துக் கும்பாபிஷேகம் நடத்துதல் இம்மைக்கும், மறுமைக்கும் புண்ணியத்தைத் தரவல்ல பேறாகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனவும் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனவும் எம்முன்னோர்கள் சொல்லிய பேறே துன்பமில்லா மனசஞ்சலமில்லா வாழ்வினைத் தர வல்ல ஆலய வழிபாட்டின் மகிமையை உணர்ந்து செய்யப்படும் இவ்வாறான புண்ணிய கருமங்களில் கலந்து கொண்டு பெருமானை வழிபட்டுப் பயன் பெறுவோமாக.

இயற்கையின் அழிவாலும் ஏனைய துன்பங்களாலும் பாதிக்கப்பட்டுத் துயருறும் மக்களின் மறுவாழ்வுக்கு விநாயகப் பெருமானின் திருவருள் கிட்டவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக–

இக்கும்பாபிஷேகத்தை நடத்தும் ஆலய பரிபாலன சபையினருக்கும் வண்ணார்பண்ணை வாழ் மக்களுக்கும் கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாச்சாரியர்களுக்கும் இறைவனின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



## அரசடி விநாயகருக்கு திருக்குடமுழுக்கு

நினைத்தவற்றைத் தருபவர் விநாயகப்பெருமான். அவர்வித்தையையும் விநயத்தையும் தருபவர். பால், தெளிதேன், பாகு, பருப்பு என்பவற்றை அவருக்குப் படையலிட்ட ஔவையார் தனக்கு சங்கத்தமிழ் மூன்றிலும் பேரறிவு தரும்படி வேண்டுகிறார். அரனின் மூத்தமகனாகிய பிள்ளையார் விரும்பி உறையும் இடங்களிலே ஒன்று அரசமரத்தடி ஆகும். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மணிக்கூட்டு வீதியிலே ஓர் அரசமரம். இந்த அரசமரத்துடன் ஒரு வேம்பு ஓங்கி வளர்ந்துள்ளது. சிவனும் உமையுமாக இவ்விரு மரங்களும் அமைந்து நிற்க விநாயகப்பெருமான் அந்த இடத்திலே கோயில் கொண்டருளி அவ்விடத்தைச் சூழவுள்ள மக்களுக்கு அருள்பாலித்துவருகிறார்.

அரசடி விநாயகருடைய திருக்கோயிலைப் புதுப்பிக்கும் பெருங்குடமுழுக்கும் புதிய இராஜகோபுரக் குடமுழுக்கும் இன்று நடைபெறுவதையிட்டு அடியார்கள் மனம் மகிழ்வு அடைகின்றது. புதுப்பொலிவு கொண்டமையும் கோயிலிலே வீற்றிருந்து எம்பெருமான் அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். இன்னல்களும் இடையூறுகள் பலவும் எம்வாழ்வினைப் பல்வேறுவகையிலே சோதித்துள்ளன. அவற்றையெல்லாம் நீக்கி நாம் இயல்புடைய நல்வாழ்வு பெற அப்பெருமானுடைய நல்லருள் எங்களுக்குக் கிடைக்கவேண்டுமென இந்த நல்ல வேளையில் வேண்டுகிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.



## இலகுவில் வழிபட இசைந்தவர்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும் ஆதலால், வானோரும் ஆனைமுகத்தானைக் காதலால் கூப்புவர் தம் கை

தேவர், மனிதர் ராஷதர் ஆகிய யாவராலும் எக்காலத்தும் வணங்கப்படுபவர் விநாயகர். தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாததால் விநாயகர் எனும் பெயர் தாங்கித் தாமே யாவர்க்கும் தலைவனாகி அருள்பாலிப்பவர் அவர்.

அத்தகைய முழுமுதற் தெய்வமாகிய விநாயகப் பெருமான் எங்கும் இலகுவில் வழிபட இசைந்தவர். இருப்பினும், ஆகமநெறி முறைகளுக் கமைய ஆலயங்களிலே முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு மந்திரபூர்வமாகப் பூஜை வழிபாடுகள் நிகழ்த்தப்படும்போது அவரருள் அபரிமிதமாகக் கிட்டும் என்பது சாஸ்திரோக்தம், லோகஷேமத்திற்கும் அதுவே சிறப்பு.

அதற்கிணங்க யாழ்ப்பாண நகரத்தின் கண்ணே வண்ணார் பண்ணை எனும் சிறந்த பதியிலே நீண்டகாலமாகக் கோயில்கொண்டு எழுந்தருளித் திருவருள் பாலித்துக்கொண்டிருக்கும் அரசடி விநாயகர் ஆலயத்தில் இன்று புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நிகழ்வது மகிழ்ச்சிக்குரியதே. இங்கு அழகிய ராஜகோபுரம் ஒன்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த மஹாகும்பாபிஷேகத்தில் பிரதம குருவாக இருந்து கிரிகைகளை ஆற்றும்படி விநாயகப் பெருமான் அடியேனுக்கு அருள்செய்திருக்கிறார். அவரது திருவருளினாலே மக்கள் யாவரும் சிறப்பான நல்வாழ்கை வாழவேண்டுமென ஆசிகூறுகிறேன்.

சிவஸ்ரீ சி.ஜோதீந்திரக்குருக்கள்
பிரதம குரு, காளி கோயில், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



## மனிதப்பிறவி மாண்புற வழிசமைப்போம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஆன்றோர் வாக்கு. அதனால்தான், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனவும் கூறினர்.

இந்தச் சரீரம் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம் என்பது நாவலர் கூற்று.

அதனால்தான், இன்று ஊர்கள் தோறும் பல்வேறு ஆலயங்களை உருவாக்கியும் புதுப்பித்தும் கும்பாபிஷேகம் செய்தும் வருகின்றனர் ஆன்மீகவாதிகள்.

அவ்வகையிலே வீணாகானபுரம் என அழைக்கப்படும் யாழ்ப்பாண நந்நகரிலே வண்ணார்பண்ணைப் பதியிலே உறைந்து அருளாட்சி செய்து வரும் அரசடி விநாயகப் பெருமானுக்கு மிகச்சிறப்பாக ஆலயத்தைப் புனரமைத்துக் கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்துகின்றனர்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க இப்போது புதிதாக இராஜகோபுரம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இது ஆலயத்திற்கு அழகையும் பெருமையையும் கொடுக்கின்றது. எல்லாம்வல்ல விநாயகப்பெருமானின் திருக்குட முழுக்கு விழா இனிதுற நிகழவேண்டுமென்று பிரார்த்தித்து இவ்விழாவினால் இன்புற்றிருக்கும் எம்பெருமான் அடியார்கள் மீது அருள்மழை பொழிந்து எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழவேண்டுமென்று வேண்டி நல்லாசி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"கால்களாற் பயனென் கறைக்கண்டனுறை கோயில் கோலக்
கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்" – அப்பரடிகள்

ஆலய ஸ்தானிககுரு சிவஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள், சமாதான நீதவான்.





## அமைதி, சுபீட்சம் கிடைக்கட்டும்!

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அரசடிவிநாயகர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம், நமதுபிரதேசத்திற்கு அமைதியையும், சுபீட்சத்தையும் கொண்டுவரும் என்று நம்புகின்றேன். நமது இந்து மக்களின் சமயநம்பிக்கைகளும் கடவுள் பக்தியும் எம்மை தினமும் திடசித்தத்தினராக வாழவைத்திருக்கின்றது. உள்நாட்டுயுத்த அனர்த்தங்கள் நிகழ்கின்ற உலக நாடுகளில், மனம் பேதலித்தோர் தொகை 37 சத வீதமளவில் இருக்கிறது. நமது நாட்டில் அவ்வாறானவர் தொகை 17 சதவீதமாக இருப்பதற்குக் காரணம் ஆண்டவன்மீது சுமையை இறக்கி விட்டு இருக்கின்ற பக்குவமாகும். அப்பக்குவம் நம்மை வாழ வைத்துள்ளது. அரசடி விநாயகர் ஆலயத்தின் ஆரம்ப பஞ்சகர்தாதிக்களில் ஒருவராக எனது மாமனார் கா. விசயரத்தினம் இருந்த காலம் தொட்டே விநாயகரின் அருட்கடாச்சத்தைப் புரிந்து கொண்டவன் நான். ஐயனின் மஹா கும்பாபிஷேகம் இந்த தரணியை குளிர்விக்கும். வாழ்வில் நம்பிக்கையையும் பற்றையும் உற்பவிக்கும். தனது கும்பாபிஷேகத்தினை அரசடி விநாயகரே சிறப்பாக அமைத்துக் கொள்வார்.

கலாநிதி. க.குணராசா
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.



(C/40679) Spark Graphics


விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்....... விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்....... விழா சிறப்புற வாழ்த்

**சிறி அமலா**
74/1, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.:021-2225800

**சிறி ராம்**
கஸ்தூரியார் வீதி,
தொ.பே.: 021-222 5800,
0777 - 730567

**M.நாகரட்ணம் அன் கோ**
63, 137, ஸ்ரான்லி வீதி,
தொ.பே.: 021-222 2406, 021-2222327

**பட்டாபி படமாடம்**
226, கே.கே.எஸ். வீதி,
64, மணிக்கூட்டு வீதி, தொ.பே.:021-2227821

**T.R. குணசேகரன்**
27, ஸ்ரான்லி வீதி,
தொ.பே.:7573

**சேகர் குளிர் ஊற்று**
மணிக்கூட்டு வீதி

**மலேயன் கபே**
36,38 கிரான் பசார் வீதி,
தொ.பே.:021-2222373

**ஜெகன் போட்டோ**
399, மணிக்கூட்டு வீதி.

**லிங்கன் கிறீம் கவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.:0094212227327, 077 111410

**அப்பலோ வைத்திய நிலையம்**
பலாலி வீதி, தொ.பே.:021-222 3305


**சிறி மாதவன்**
கஸ்தூரியார் வீதி

**வேல்முருகன் வணிக நிலையம்**
மணிக்கூட்டு வீதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ார்பண்ணை மணிக்கூட்டு வீதி
# ...ந்தன அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேகம்
# ...பிஷேகச் சிறப்புமலர் – 31.01.2005





### மூஷிக வாகனனே! மோதகப் பிரியனே!

ஆனைமுகப்பிள்ளையாரே! அரசடியில் வாழ்பவரே!
விக்ன விநாயகரே! வினை தீர்ப்பாய் ஐயா!
மோனைப் பொருளே! மூத்தவனே கணேசா!
ஐங்கரனே சங்கரன் மைந்தனே வாவா!
பானை வயிற்றோனே! பக்தர்களைக் காப்பவனே!
மூஷிக வாகனனே! மோதகப்பிரியனே!
வானைத்தொடும் கோபுர தரிசனம் கண்டோமே!
வணங்கினோம் உன்னையே வரமருள
வேண்டுமையா!

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்



## புதுப்பொலிவு பெற்றுள்ள யாழ். வண்ணை மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலயம்

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்று எமது ஆன்றோர் கூறியுள்ளார்கள். கோயில் என்பதன் பொருள் இறைவன் அல்லது தலைவன் எழுந்தருளியிருக்கும் இல்லம் என்பதாகும். ஆலயங்களுக்குச் சென்று நாம் வழிபாடு செய்கின்றோம். எமக்கு என்றும் அருள்பாலிப்பவன் இறைவன். அவனது கருணையை நினைந்து அவனுக்குக் கைம்மாறு செய்யும் வகையில் அவனைப் பலபட வழிபடுகின்றோம். இறைவழிபாடு செய்வதால் எமக்கு மனஅமைதி ஏற்படுகின்றது. இறைவழிபாடு மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து விளங்குகின்றது. தமது வாழ்க்கையின் ஒருகூறாக வழிபாட்டைக் கொண்டு மக்கள் வாழ்கிறார்கள்.

மக்கள் தாம் வாழும் இடங்களில் எல்லாம் கோயில்களைக் கட்டினார்கள். கோயில்களில் தமது இஷ்ட தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார்கள். இவ்வழிபாடானது தொன்றுதொட்டு நிலவிவரும் ஓர் அம்சமாகும்.

சிவன்கோயில், அம்மன் கோயில், முருகன் கோயில், விநாயகர் கோயில் என இறைவனுடைய திருவுருவங்களை அமைத்துக் கோயில்களைக் கட்டினார்கள். எமது ஈழநாட்டு மக்கள் சமயவழி நின்று ஒழுகுபவர்கள். இங்கு கோயில்கள் இல்லாத ஊர்களே இல்லை எனலாம்.

ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் விநாயகருக்குப் பல கோயில்கள் உள்ளன. அரசமர நிழலில், ஆற்றோரங்களில், முச்சந்திகளில் என எங்கும் வீற்றிருப்பவர் விநாயகப் பெருமான். விநாயகர் என்பதன் கருத்து தனக்கு மேல் எவரும் இல்லாத ஒப்பற்ற தலைவன் என்பதாகும். நாம் எச்செயலைத் தொடங்கும்போதும் விநாயகரை வழிபாடுசெய்து தொடங்கினால் எவ்வித இடையூறுமின்றி அச்செயல் இனிதே நிறைவேறும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. இதனால்தான், எத்தொழிலைத் தொடங்கும் போதும் சாணத்தினாலோ அன்றேல் மஞ்சளினாலோ ஒரு பிள்ளையாரைப் பிடித்துவைத்து நிகழ்வைத் தொடங்கும் வழக்கம் இருக்கிறது. எமக்கு ஏற்படும் தடைகளை, இடர்களை, விக்கினங்களை நீக்குபவர் விநாயகர் என்பதனால் அவருக்கு விக்கினேஸ்வரன் என்ற பெயரும் உண்டு.

ஆனைமுகமும் பேழை வயிறுமாக எலியின் மீது வீற்றிருப்பவர் விநாயகர். துதிக்கையை ஐந்தாவது கையாகக் கொண்டிருப்பதால் ஐங்கரன் என்றும் ஒரு பெயர் உண்டு. வியாசமுனிவர் பாரதம் எழுதும் போது அவரின் எழுத்தாணி உடைந்ததால் தனது தந்தமொன்றை ஒடித்துத் தானே பாரதத்தை எழுதி முடித்ததாகப் புராணங்கள் கூறும். இதனை உணர்த்துவதே விநாயகர் கையிலுள்ள தந்தம். ஒற்றைக் கொம்புடன் இருப்பதனால், ஏகதந்தன் என்பதும் அவருடைய திருநாமங்களில் ஒன்று.

இத்தகைய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள விநாயகப் பெருமானுக்கு யாழ்ப்பாணத்தில் பல கோயில்கள் உள்ளன. பிள்ளையார் கோயில் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லலாம். அரசமர நிழலில் விரும்பி வாழும் விநாயகப் பெருமானுக்கு அம்மரத்தின் பெயரைக் கொண்டு சூட்டப்பட்ட பெயர் அரசடி விநாயகர் என்பதாகும். வண்ணார்பண்ணையில் மாநகரசபை எல்லையுள் மணிக்கூட்டு வீதியின் அந்தத்தில் உள்ளதுதான் அரசடி விநாயகர் ஆலயம். பல வருடங்களாக அடியார்கள் குறைதீர்த்து வரும் விநாயகப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்ட குடும்பங்கள் பல உள்ளன. இவர்கள் தமது குறைகளை விநாயகப் பெருமானிடம் முறையிட்டு நிறைவு பெற்றுள்ளார்கள். காலையில் தமது தொழில் நிமித்தமாக அவ்வீதி வழிசெல்வோர் பலரும் விநாயகப் பெருமானை வழிபட்டுத் தமது அன்றைய கருமங்களைத் தொடங்குவார்கள். ஆசிரியர், மாணவர்கள், தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர், முதலாளிகள், ஊழியர்கள் எனப் பல திறப்பட்டோரையும் வாழவைக்கும் விநாயகப் பெருமான் சக்திமிக்கவர் என்பது பலராலும் அறியப்பட்ட ஒன்றாகும்.

இந்த ஆலயத்தில் வருடந்தோறும் அலங்காரத்திருவிழா நடைபெறுவதுடன், விநாயகர் சதுர்த்தி, பிள்ளையார் கதை, நவராத்திரி, கந்தஷஷ்டி, கார்த்திகைத் தீபம், திருவெம்பாவை போன்ற முக்கிய விரதங்களும் முறையாக அனுஷ்டிக்கப்பெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் இங்குவந்து வழிபாடு செய்யும் அடியவர்கள் பலர்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாகக் கோயிலில் சில நிர்மாணவேலைகள் செய்யவேண்டியிருந்தன. அவ்வேலைகளுடன் கோயில் கோபுரமும் அழகுற அமைக்கப்பட்டது. வெளிநாட்டிலும் உள்நாட்டிலுமுள்ள அரசடி விநாயகர் அடியவர்கள் பொருளுதவியுடன் கோபுரவேலை நடைபெற்றது. இன்று கும்பாபிஷேகம் காணும் எம்பெருமான் ஆலயம் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது. இக்கோவிலின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்ட அமரர் சிவஞானசுந்தரக்குருக்கள் அவர்களை மறக்கமுடியாது.

விநாயகப் பெருமான் தன்னை நாடிவரும் அடியவர்கள் யாவருடைய குறைகளையும் தீர்க்கும் வள்ளல் பெருமான். உள்ளூரில் மட்டுமன்றி வெளியூரிலும் உள்ள அடியவர்கள் விநாயகப்பெருமான் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளார்கள். கும்பாபிஷேகம் நடைபெறும் இந்நன்னாளில் அடியவர்கள் யாபேரும் எல்லாநலனும் பெற்று இன்புறு வாழ எம்பெருமான் அருள்பாலிப்பராக.

ஐ.கணேசலிங்கம்
தலைவர் (யாழ். மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலயம்).

## பேரின்பப் பெருவாழ்வுக்காகப் பிரார்த்திப்போம்

"சுக்லாம் பரதம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே"

எல்லா வழிபாடுகளுக்கும் முதலில் விநாயகரை வழிபடுவது நமது மரபு எங்கும் நிறைந்தவர் அவர் விஷ்னு என்பதன் பொருள் எங்கும் நிறைந்தவர் அதனால்தான் சுக்லாம் பரதரம் விஷ்னும் என்று அவரைத் தியானித்து சிரசிலே குட்டிக் கொண்டு பூஜைகளை ஆரம்பிக்கின்றோம் பூஜை வழிபாடுகள் மட்டுமன்றி எல்லாச் செயல்களின் ஆரம்பத்திலும் விநாயகரை வழிபடுகின்றோம்.

விக்னேஷ்வரராகிய அவர் விக்கினங்களின் தலைவர் தடைகளை உண்டாக்குபவரும் அவரே தடைகளைப் போக்குபவரும் அவரே என்று சஹஸ்ரநாமம் கூறுகிறது அதனால் எக்காரியம் தொடங்கினாலும் விக்னமில்லாமல் நிறைவேற அவரை வழிபடுகின்றோம்.

விநாயகரை அன்போடு வழிபட்டு அருள் பெறுவதற்காக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அமைந்துள்ள அரசடி விநாயகர் ஆலயத்தில் அடியார்கள் இன்று மாகா கும்பாபிஷேக வைபவத்தை நிகழ்த்துகிறார்கள். இங்கு நூதன ராஜ கோபுரம் அழகுற நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சிறந்த முறையில் இந்தக் கும்பாபிஷேக விழா நடைபெறவும், பக்தர்கள் யாவரும் பல்வேறு நலங்களும் பெற்றுப் பேரின்ப வாழ்வு வாழவும் அரசடி விநாயகர் அருள் புரிய வேண்டும் மெனப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

"சர்வேஜனா சுகினோபவந்து."

சர்வபோதகாசாரியார் சிவஸ்ரீ தி.சுப்பிரமணியக்குருக்கள்
(பிரதமகுரு சித்தி விநாயகர் கோவில், அரியாலை.)


...ாழ்த்துபவர்கள்....... விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்....... விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்.......

கொனிக்கா கலர்லாப்
வெங்கடேஸ்வரன் வீதி.
(நாவலர் வீதி).

சானுகா
2006, கஸ்தூரியார் வீதி.
தொ.பே.:021- 222 3700

சிறீ மீனாட்சி
187, கஸ்தூரியார் வீதி

சிவதர்ஷன்
394, மணிக்கூட்டு வீதி.
தொ.பே.:021-2222417

IIS
100, மணிக்கூட்டு வீதி.
தொ.பே.:222-2831

PC PARADISE
61, மணிக்கூட்டு வீதி.
தொ.பே.: 0777 271220

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி.

அருள் கொமினிகேஷன்
பிறவுண் வீதி.
தொ.பே.:021- 2223536, 021-2227097

கலாலயா
மணிக்கூட்டு வீதி.

சிறீ நதியா நகை மாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, தொ.பே.:021- 222 2709
ஒரே கூரையின் கீழ் கிளை
சானுயா நகை மாளிகை
58, கஸ்தூரியார் வீதி.
சிறிரூபா நகைமாளிகை
கஸ்தூரியார் வீதி.

மா.திருவாசகர்-ஸ்ரீரங்கா மில்ஸ்
கலைப்புலவர் வீதி.

நியூ கல்யாணி ஜுவல்லர்ஸ்
87, கன்னாதிட்டி வீதி.
தொ.பே.:0777 280268


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் **வைகுந்தராஜா ரஜனிகாந்த்**

[(B.Sc. (Com. Sc. special)]



இன்று (31-01-2005) கொழும்பு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கணனி விஞ்ஞான விஷேட பிரிவில் பட்டம் பெறும்

செல்வன் வைகுந்தராஜா ரஜனிகாந்த்

[B.Sc. (Computer science special)]

அவர்களைப் பாராட்டி மகிழ்வதோடு.

மேலும் பல சிறப்புக்களைப்பெற எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

No.29.காட்டுக்கந்தோர் வீதி, சுண்டுக்குளி.

சித்தப்பா-தியாகலிங்கம், சித்தி-குஞ்சு, தங்கைகள் - வித்யா, இகனசலா.

(41440)(46-19-15)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்

**வைகுந்தராஜா ரஜனிகாந்த்**

[(B.Sc. (Com. Sc. special)]



யா/டிறிபேக் கல்லூரி, யா/இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் செல்வன் வைகுந்தராஜா ரஜனிகாந்த் (மதன்) B.Sc. in Computer Science special இன்று கொழும்பு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கணனி விஞ்ஞான விஷேட பிரிவில் பட்டம் பெறுவதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி [மண்டைதீவு].

அப்பா, அம்மா, சகோதரங்கள்.

(41439)(46-19-15)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 649 |
| திகதி | 28-1-2005 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5211323 - 5226064

வெற்றி இலக்கங்கள் 29 35 44 53

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா.23,49,350/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 30,78,400/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,26,476 | 10/- | 32,64,760/- |
| 2.இலக்கங்கள் | 29,925 | 20/- | 5,98,500/- |
| 1.இல + லக்கினம் | 29,644 | 30/- | 8,89,320/- |
| 2.இல + லக்கினம் | 2,789 | 100/- | 2,78,900/- |
| 3.இலக்கங்கள் | 806 | 500/- | 4,03,000/- |
| 3.இல + லக்கினம் | 69 | 5,000/- | 3,45,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 23,49,350/- | - |
| மொத்தம் | 3,89,719 | - | 73,31,730/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 73,31,730/-

தொடர் இல. 4256079 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5216918-1-69

5215393-3-37

5220507-4-85

5214013-4-02

522537-24-61



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 - 07 - 1921



மறைவு 12 - 02 - 2004

**கந்தையா செல்லத்துரை**

(இளைப்பாறிய ஆசிரியர்)

ஆண்டு ஒன்று போனாலும் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்
பாசத்தின் உறைவிடமாய் இருந்து எங்களை வளர்த்து
ஆளாக்கிய அன்புத் தெய்வமே! உங்கள் நினைவை என்றும் மறவோம்.

இன்று (31-01-2005) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்: கருணாகரன் (மகன்), இடைக்காடு.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(41428)(46-19-15)


# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு - கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## "ஆ.அ.வ" கடன் இல. 2043 - SRI (SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் இல.04

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்ட (CAARP) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொற' வைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் விடுதி புனரமைத்தல் - தொகுதி I | M8 | 18,000/- |
| 02 | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் தாதியர் விடுதி புனரமைத்தல் - தொகுதி 2 | M7 | 40,000/- |
| 03 | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் வாட் இல. II புனரமைத்தல் - தொகுதி 3 | M7 | 31,000/- |
| 04 | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் சிற்றூழியர்கள் விடுதி புனரமைத்தல் - தொகுதி 4 | M7 | 40,000/- |
| 05 | JF/CAARP/HS/03 | பருத்தித்துறை அம்பன் மத்திய மருந்தகமும், பிரசவ விடுதியும் புனரமைத்தல் | M7 | 36,000/- |
| 06 | JF/CAARP/ED/17 | யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் 1 'X58' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் பூர்த்திசெய்தல் | M7 | 38,000/- |
| 07 | JF/CAARP/ED/18 | யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் 90'X30' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 43,000/- |
| 08 | JF/CAARP/ED/22 | சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 130'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 | 51,000/- |
| 09 | JF/CAARP/ED/23 | பருத்தித்துறை சென்.தோமஸ் ஆர்.சி.ஜி. பாடசாலையில் 90'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 36,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7 இற்குமேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
   iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல்வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   iv) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   v) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக்கூடாது.
   vi) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல்வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை *மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில்* பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021-222 3625, தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf @ sltnet.lk
6. ஒப்பந்த ஆவணங்கள் மாசி மாதம் 2ஆம் திகதி முதல் மாசி மாதம் 16ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேளவியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "*தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்* இற்கு மாசி மாதம் 24ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் மாசிமாதம் 14ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஷ்,**
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-40689)(26-14-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் தந்தையரை இழந்துள்ள சிறார்களை பராமரிப்பது ஒவ்வொருவரதும் கடமை

## இரங்கல் திருப்பலியின்போது யாழ்.ஆயர் வலியுறுத்து

குருநகர்,ஜன.31

சுனாமி கடலலையால் தமது தாய் தந்தையர்களை இழந்து பரிதவிக்கும் சிறுவர்



களைப் பராமரிப்பதற்கு எமது பங்களிப்பை வழங்க வேண்டியது எமது ஒவ்வொருவரது கடமையாகும்.

சுனாமி கடலலையில் இறந்தவர்கள் நினைவாக அண்மையில் யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்ற இரங்கல் திருப்பலிக்கு தலைமைதாங்கிய யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தமது மறையுரையின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மரியன்னை பேராலயத்தில் இவ் விசேட இரங்கல் திருப்பலி கடந்த 25ஆம்




திகதி மாலை இடம்பெற்றது.

யாழ்.ஆயர் தமது மறையுரையில் -

சுனாமி கடலலை தாக்கிய தினமான கடந்த வருடம் டிசெம்பர் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை குடும்பத்தினராக நாம் திருப்பலிகளில கலந்துகொண்டோம். அன்று காலை 10 மணியளவில் யாழ்.மனித முன்னேற்ற நடுநிலை இயக்குநர் வண.பிதா கி.ஜெயக்குமார் அடிகளார் தொலைபேசியில் எனக்கு சுனாமி அலை செம்பியன்பற்று கிராமத்தைத் தாக்கிய செய்தியை தெரிவித்தார். அத்துடன், தான் மருந்துப் பொருள்களுடன் பளைப் பகுதிக்குச் செல்ல உள்ளதாகவும் தெரிவித்தார். செம்பியன்பற்றுப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி ஓடிக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர், வானொலியைத் திறந்தபோது இலங்கையில் சுனாமி கடலலையின் தாக்கம் தொடர்பான செய்திகளை வெளியிட்டவாறு இருந்தது. ஆனால், வடக்கு-கிழக்கில் நடைபெற்ற இழப்புகள் தொடர்பான விவரங்கள் அவர்களால் அன்று வெளியிடப் படவில்லை. வடக்கு - கிழக்கில் நடைபெற்ற அழிவுகள் அவர்களுக்கு உடன் கிடைக்க வில்லையோ தெரியவில்லை.

அன்று பிற்பகல் முல்லைத்தீவுப் பங்குத் தந்தை தொலைபேசியில் முல்லைத்தீவில் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாகவும் முல்லைத்தீவு நகரம் அழிந்த செய்தியையும் எனக்குத் தொலைபேசியில் தெரிவித்தார்.

அடுத்தநாள் நான் தாழையடிப் பகுதியைப் பார்வையிடச் சென்றேன். அந்த அழகிய கிராமம் சுனாமியின் தாக்கத்தால் அழிவுற்றுக் காணப்பட்டதைக் கண்டேன். கடலில் இருந்து ஒரு மைல் தூரம் வரை கடல் நீர் உட்புகுந்து தாக்கியழித்ததுடன் படகுகளும் தூக்கி வீசப்பட்டுக் காணப்பட்டன.

பின்னர், நான் பளை மகா வித்தியாலயம், புலோப்பளை ஆகிய இடங்களுக்குச் சென்று தஞ்சமடைந்திருந்த மக்களைப் பார்த்தேன். மக்கள் தமது சோகக் கதைகளை என்னிடம் தெரிவித்தார்கள். வீடு வாசல் மற்றும் தொழில் உபகரணங்களை இழந்து, அகதிகளாகப் பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்த எமது மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து நீங்கள் அனுப்பிய உதவிகளே அவர்களது பசியைப் போக்கின. அத்துடன், உடுத்த உடுப்புடன் வெளியேறிய மக்களுக்கு உடைகளும் வழங்கினார்கள்.

எனினும், இப்பேரலையால் பாதிக்கப்பட்டு தமது உடன்பிறப்புக்களையும் பெற்றோர்களையும் இழந்துள்ள சிறார்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவவேண்டியது எமது கடமையாகும். இவ்வுதவிகளை வழங்குவதற்கு எமது திருச்சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. உங்கள் பங்குகள் மூலம் இவ்வுதவியை நீங்கள் செய்ய முடியும் -என்று கூறினார். (ப-51)

# யாழ்.மாவட்டத்தில் எய்ட்ஸ் பற்றி அடிக்கடி பேசப்படும் நிலை !

## பேராசிரியர் கவலை

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.மாவட்டத்தில் எய்ட்ஸ் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. அது மனவேதனைக்குரிய ஒருவிடயமாகும். இந்நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். இந்த நிலைமையை மாற்றி அமைக்கும் பொறுப்பு இளைஞர்களுடையது.

- இவ்வாறு தெரிவத்துள்ளார் யாழ்.பல்கலைக் கழக பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு செய்த எய்ட்ஸ் நோய் தொடர்பான பயிற்சிப் பட்டறையும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் பேசப்படாமலிருந்து வந்த எச்.ஐ.வி.எய்ட்ஸ் எனும் நோய் தற்போது பேசப்படும் ஒரு நிலைமைக்கு வந்துள்ளது. இது ஒரு வேதனை தரும் விடயமாகும்.

இன்றைய காலகட்டத்தில் கலாசாரபிறழ்வுகள் அதிகமாக காணப்படுகின்றன. இந்த நிலையை மாற்றவேண்டும். இது எமது இளைஞர்கள், யுவதிகளுடைய கைகளிலேயே தங்கியுள்ளது. இளைஞர், யுவதிகளிடம் காணப்படும் பொறுப்பை இதுமேலும் சுமையாக மாற்றினாலும் அவர்கள் இந்தப் பொறுப்பபை உணர வேண்டும். அப்போதுதான் எமது சமுதாயம் எமது சமூகம் எய்ட்ஸ்நோயின் தாக்கத்திலிருந்து விடுபட்டு ஒரு நலமான சமுதாயமாக உருவாகும் என்றார்.

இந்த நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி எஸ்.சர்வானந்தா மற்றும் செங்குட்டுவன் உட்படப் பலர் கருத்துரைகளை வழங்கினர். (ப-5)

# சுனாமி அனர்த்தத்தால் மீள்குடியேற்ற செயற்பாடு பின்தள்ளப்படக்கூடாது

## உலகவங்கி வீடமைப்புத் திட்டப்பணிப்பாளர் கருத்து

வலி.வடக்கு,31

சுனாமிக் கடல் அனர்த்தம், மக்களுடைய



அன்றாட வாழ்க்கை நிலைமையைக் குழப்பியுள்ளது. இதேபோன்று மக்களுடைய உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியேறுவது சம்பந்தமான செயற்பாடுகளையும் பின்தள்ளியுள்ளது. சுனாமி அனர்த்தத்திற்காக மீள்குடியேற்ற செயற்பாடுகள் பின்தள்ளப்பட்டுச் செல்வதற்கு சந்தர்ப்பங்களைக் கொடுக்கக்கூடாது.

மேற்கண்டவாறு முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபரும் உலக வங்கியின் வடக்கு-கிழக்கு வீடமைப்புக்கானப் புனரமைப்புத் திட்டப்பணிப்பாளருமான செ.பத்மநாதன் குறிப்பிட்டார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைச் செயலகம் மொத்த வியாபார நிலையக்கட்டடங்கள் 80 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு, திறப்பு விழா நிகழ்வு சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்றது.

கட்டடங்களை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய செ.பத்மநாதன் மேலும் தெரிவித்ததாவது:-

எனக்கு இவர்கள் இச்சங்கம் சம்பந்தமான திட்டத்தை மிகவும் குறுகிய காலம் இருக்கும்போதே சமர்ப்பித்தனர். இந்நிலைமையில் என்னால் ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு மிகவும் சிறந்த முறையில் குறுகிய காலப்பகுதியில் கொடுக்கப்பட்ட நிதியை நல்ல முறையில் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தியுள்ளனர். இதனை ஏனைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும்.

80 வீதமாதன வேலையை முழுமையாகப் பூர்த்திசெய்துள்ளனர். இதற்கு சங்கப் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். சுனாமி அனர்த்தத்திற்கு முன்னா பணம் பெறுவதில் சிரமங்கள் எவையும் இருக்கவில்லை. தற்போது சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பணம் பெறுவதில் இத்தகையத் திட்டங்களுக்குப் பிரச்சினைகள் உண்டு.

இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற அனுமதிக்கவேண்டும் எனக்கோரி பல்வேறு வகையான போராட்டங்களைப் பல அமைப்புகளும் முன்னெடுத்தன. இப்போராட்டங்கள் எவையும் வெற்றி பெறவில்லை. ஆனால், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்ற சில நடவடிக்கைகளை மிகவும் மெதுவாக மேற்கொண்டேவருகின்றோம்.

புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பன உயர்பாதுகாப்பு வலயமான பகுதியில் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களும் நாளடைவில் மீளக்குடியேற அனுமதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுடைய புனர்வாழ்வு நடவடிக்கைகள் கட்டியெழுப்பப்படும்போது இடம் பெயர்ந்த மக்களுடைய பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களுடைய இத்தகைய செயற்பாடுகளுக்கு அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய அமைப்புகளும் அரச ஊழியர்களும் முழுமையாகச் செயற்படவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் இன்று யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை இரண்டாம் தரப்பிரஜைகளாக மதிக்கப்படும் நிலைமையே காணப்படுகின்றது. இத்தகைய நிலைமையில் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த மக்களை இருக்கவிட முடியாது. இதற்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் சி.சிவமகாராசா உரையாற்றும்போது -

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் போது காங்கேசன்துறையில் உள்ள களஞ்சியத்தில் இருந்து பொருள்களை எடுத்து விநியோகம் செய்ய அரச உத்தியோகத்தர்கள் மறுத்தபோதிலும் எமது சங்க ஊழியர்களும் நானும் சென்று பொருள்களை எடுத்துவந்து ஏனைய சங்கங்களுக்கும் விநியோகத்தை மேற்கொண்டுள்ளோம்.

கடந்த கால இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து மல்லாகம் மானிப்பாய் என்று பல இடங்களுக்கும் எமது சங்கம் அலைந்த பின்பே எமது தலைமையகம் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. தற்போது சங்கத்தின் அலுவலகப் பகுதி மற்றும் மொத்த விற்பனை நிலையங்களையே இக்கட்டடத்திற்கு மாற்றியுள்ளோம். என்று கூறினார்.

மற்றும் கட்டைவேலி, நெல்லியடி, நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களான அ.சிதம்பரப்பிள்ளை க.கிருஷ்ணராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். (ப-86)

# கற்பிக்கும் ஆசிரியரே மாணவரின் பொறுப்பையும் ஏற்கவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜன.31

"ஆசிரியர் ஒரு பிள்ளைக்குக் கற்பிக்கும்போது அதற்கான பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்படும்போதே பிள்ளையின் முன்னேற்றத்தை வளர்க்கமுடியும்."

- இவ்வாறு நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் கடந்த ஆண்டிற்கான இறுதித் தவணைப் பரிசளிப்பும் கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்திய தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் தெரிவித்தார்.

நிறுவன இயக்குநர் எஸ்.சரா புவனேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

பிள்ளைகளின் பின்னடைவிற்கு பெற்றோரே முழுப்பொறுப்பு. பெற்றோர் பிள்ளைகளின் கட்டுப்பாட்டில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

12 தொடக்கம் 18 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் கட்டுப்பாடுகளை மீறி நடப்பது வழமையான செயற்பாடே. அதனைப் பெற்றோர் முழுக் கண்காணிப்புடன் இருந்து வெற்றிகொள்வதன் மூலமே பிள்ளைகளின் எதிர்காலத்தைத் திட்டமிடமுடியும்.

பெற்றோர், ஆசிரியர்களுடன் தொடர்பினை வைத்திருத்தல் வேண்டும். அதன்மூலமே பிள்ளைகளின் உயர்வு தாழ்வுகளை நன்கு அறிந்து அதற்கு ஏற்றவகையில் பிள்ளைகளை வழி நடத்தமுடியும்.

இன்று அநேகமான பிள்ளைகள் தொலைக் காட்சியுடனேயே தமது நேரத்தினைச் செல விடுகின்றனர். இதனை முற்றாகத் தடுக்க முடியாது. பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தொலைக் காட்சி பார்ப்பதற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக் கொடுப்பதன் மூலம் பிள்ளையின் கல்வி நிலையை மேம்படுத்த முடியும்.

பெற்றோர் தமது கடமையை உணர்ந்து செயற்படவேண்டும்.

2006 ஆம் ஆண்டு முதல் பாடசாலைகள் கணனி மயப்படுத்தப்படவுள்ளன. அடுத்த ஆண்டு முதல் தரம் 10 மாணவர்களுக்கும் கணனிக் கல்வி அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றார்.

நிறுவன இயக்குநர் தமது உரையில் -

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது யாழ்மாவட்ட மாணவர்கள், பொது மக்கள் தம்மாலான உதவிகளை காலத்தின் தேவையை உணர்ந்து செய்தனர். அது எம்மைப் பெருமைப்பட வைத்தது.

ஆனால், அந்தப் பெருமை எல்லாம் கடந்த தைப்பொங்கல் தினத்தையொட்டி வெடித்த வெடிச்சத்தங்களுடனும், வாணவேடிக்கைகளுடனும் சுக்குநூறாகிவிட்டன. இந்த அநாகரிகமான செயல் பெரும்பாலானவர்களை வேதனைப் படவும் விசனப்படவும் வைத்தது என்றார்.

தொடர்ந்து பிரதமவிருந்தினர் ஐ.புவனேந்திரன் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் கணிப்பீட்டறிக்கையையும் வழங்கினார்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற அனைத்துப் பரீட்சைகளிலும் முதல் நிலையில் தேறி, அதி கூடிய சராசரிப்புள்ளிகளைப் பெற்ற தரம் 11 இல் கல்விகற்கும் [illegible] மாணவி எம்.ரஜீனா [illegible] கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.(ப- 12)

# கல்விக்கு முன்பாக மாணவருக்கு கருணை மனப்பான்மை வேண்டும்

கல்விக்கு முன்பாக மாணவர்களுக்கு கருணை மனப்பான்மை வேண்டும். அதன் அவசியத்தை மாணவர்களுக்கு முதலில் கற்பிக்கவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன். பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் முன்பாக நிறுவப்பட்டுள்ள கலைமகள் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய ஆறுதிருமுருகன் தமதுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஆசிரியர்கள், பெற்றோர்கள் கூடிய கவனம் எடுத்தால் வருங்காலத்தில் ஓர் நல்ல சமுதாயத்தை நாம் கண்டுகொள்ளலாம். பாடசாலைகளில் கல்விக்கூடங்களில் முனபாக சரஸ்வதி சிலை வைத்து வழிபாடுகள் செய்து கருமங்கள் நடைபெற்று வருகின்றதை நாம் கண்டு வருகின்றோம். எனது கையால் பன்னிரண்டு இடங்களில் சரஸ்வதி சிலையை திறந்துவைக்கும் பெரும் வாய்ப்பை பெற்றுள்ளேன். இன்று பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் எனது [illegible] திறந்துவைக்கப்படும் சரஸ்வதி சிலையை நிறுவுவதில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி நல்லாசான் ஆசிரியர் சி.ஞானச்சந்திர மூர்த்தி உதவியுள்ளார் என்பது எனக்கு பெரும் மகிழ்ச்சியாகவுள்ளது.



கல்வியுலகில் மிகவும் மேம்பட்டு வைத்திய நிபுணர்களாகவும் பொறியியலாளர்களாகவும் விளங்கும் பிள்ளைகளை பெற்றுத்தந்தவர் திரு.சி. ஞானச்சந்திரமூர்த்தி. இவரது இந்தப் பணியைப் பாராட்டுவதுடன் இங்கு நிறுவப்பட்ட சரஸ்வதி சிலை மூலமாக நல்ல பயனைப் பெறவேண்டுகின்றேன் - என்றார்.

வித்தியாலய அதிபர் திரு.வி.நடராசா விழாவுக்குத் தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.ந.சண்முகசுந்தரம், திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்து சிறப்பித்தனர்.

சிவசிறி சு.சுந்தரராசக்குருக்கள் ஆசியுரையையும் திரு.சி.ஞானச்சந்திரமூர்த்தி நிறைவுரையும் நிகழ்த்தினர். (ப-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள சிசில் 60 குளிர்சாதனப் பெட்டியும் லவ்பேர்ட்ஸ் (LOVE BIRDS) பறவைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 819/1, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 5401 (41463)

நல்ல நிலையிலுள்ள PEUGEOT 403 3 SRIxxxx தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு. மோட்டார் சைக்கிளுக்கு மாற்றியும் கொடுக்கப்படும். தொடர்பு: மு.விமலநாதன், 27/20, புங்கன்குளம் வீதி (நாகராசா லேன்), பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.(41484)

## காணி விற்பனைக்கு

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும். K.சிவராஜா, "ராஜாவாசா", 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873, மகா - 0776203974. (41442)

## மாடி வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 4000 சதுரஅடி கொண்டதும் நிலத்தின்கீழ் அறைகளுடன் சுற்றுமதில்களுடன் கூடியதுமான 6பரப்புக் காணியில் மாடி வீடு உடனடியாக (மேலதிக கட்டடத்துடனும்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க.சிவராஜா, "ராஜவாசா", இல.151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873 (சிவராஜா), 0776203974 (மகா).(41383)

## வீடு வாடகைக்கு

சுன்னாகம் தெற்கு, சிவபூதராயர் கோயில் வீதியில் (கோவிலுக்கு அருகில்) வசதியான வீடு உண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம் 2490, உதயன், யாழ்ப்பாணம். (சி/40710)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, ஈச்சமோட்டை வதி, முதலாம் ஒழுங்கையில் இணைந்த வடுகள் விற்பனைக்குண்டு. (TWIN HOUSES) விவரங்களுக்கு: 011-2727885 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (சி-40720)

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டிச் சந்தியில் இருந்து அளவெட்டிப் பக்கமாக 300 m தூரத்தில் அம்பாஸ் ஸ்ரோர் கடைக்கு அருகில் ரட்ணம் Communication இற்கு முன்பு 2 பரப்பு, 2 குளி காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சீ.நாகேந்திரமூர்த்தி, 61/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (41487)

## தவறிவிட்டது

இல.431, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகப்பன் அழகிரிசாமி என்பவருடைய தே.அ. அட்டை (642984721V) தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (40972)

அளவெட்டியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் திலகவதி என்பவரது தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை என்பன 28.01.2005 அன்று யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வைத்தியர் வளவு, அளவெட்டி வடக்கு என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (41480)

இல. 54/7, சென்றல் வீதி, திருகோணமலையைச் சேர்ந்த சண்முகசுந்தரம் புவனேஸ்வரியின் தேசிய அ.அ. (இல.378021600V), விசேட அ.அட்டை, பாடசாலை அதிபர் அ.அட்டை என்பன கல்வியங்காட்டிலிருந்து யாழ் நகரூடாக வடலியடைப்பு செல்லும் வழியில் மினி பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஏசியன் புடைவையகம், திருநெல்வேலிச் சந்தி அல்லது மைதிலி நகைமாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிகளில் ஒப்படைத்துதவவும். (41486)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அத்த நட்சத்திரம், 1976இல் பிறந்த, A/L படித்த, சவூதியில் வேலை பார்க்கும் (கிரக பாவ 31½) செவ்வாய் அற்ற, அழகிய மணமகனுக்கு வெளிநாட்டுப் பிரஜாவுரிமையுடைய அழகிய, பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: இனிதா வைத்தியசாலை (இலங்கை வங்கி முன்பாக), சுன்னாகம். (41468)

இந்து கௌரவ குடும்பத்து, 1978, உதயச் செவ்வாய், ரேவதி மீனராசி, 23½ பாவம், 5' 4" உயரமான, A/L படித்த, U.K. பிரஜாவுரிமையுள்ள, தற்போது பெற்றோருடன் யாழ்ப்பாணம் வந்துள்ள வசதியான மணமகனுக்குப் பொருத்தமான, அழகான மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: சிவாலயா ச்ர்வதேச திருமண நிலையம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.: 021 222 7844 (41482)

## சுனாமி பாதித்தோருக்கு மானிப்பாய் சங்கம் உதவி

நவாலி,ஜன.31

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்துள்ளது. (எ-100)

## பனங்கள்ளின் விலை நாளைமுதல் குறையும்

வலி.தென்மேற்கு,ஜன.31

யாழ்.மாவட்டத்தில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்கள் நடத்திவரும கள்ளுத் தவறணைகளில் நாளைமுதல் பனம் கள்ளின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

பனங்கள்ளின் பருவகாலம் ஆரம்பமாவதை அடுத்து யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாஜம் இந்த விலை குறைப்பை செய்துள்ளது.

இதன் பிரகாரம் 25 ரூபாவாக விற்கப்பட்டு வரும் ஒரு போத்தல் பனம்கள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 20ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது. (த-135)

## சமய சந்நிதிகளில்

சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் புலோலி மத்தி மகா வேலன் தெணி முருகன் கோயில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 7 மணிதொடக்கம் 9 மணிவரையான சுப வேளையில்நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தை பிரம்மஸ்ரீ இ.சபேசக்குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார். (த-173)

★★★

புலோலி புற்றளை சித்தி விநாயகர் கோயில் கந்த புராணப் படிப்பு பூர்த்தித்தினமும், திருக்கல்யாண உற்சவமும் இன்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. (த-173)

★★★

சிறுப்பிட்டி கிழக்கு ஞானவைரவர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேக விழா இன்று காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ளது. குடமுழுக்கு நிகழ்வைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், வே.சந்திரசேகரம், வைத்திய கலாநிதி திருநாவுக்கரசு ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்குவர். (த-204)

## மரண அறிவித்தல்

திருமதி

### தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை



நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (29.01.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சேதுகாவலர் மாஸ்டர், ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் தனலட்சுமி அம்மா, பரமகுரு (உதவி வைத்திய அதிகாரி), யோகலட்சுமி, ஆனந்தராசா (உதவிப் பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்), குலதினி (ஆசிரியை, ஹம்ஷா முஸ்லிம் மகா வித்தியாலயம், கொழும்பு), மகாலிங்கம் (ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி), நாகேஸ்வரி, ஜலஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயகுமார் (லண்டன்), ஜெயக்குமார், நிமலகுமார் (லண்டன்), விஜயரஜனி (ஆசிரியை, யா/சிறுப்பிட்டி அ.த.க.), நிரஜா (லண்டன்), தனுஜா, அனோஜா, நிருபா, நளினி (விரிவுரையாளர், கணிதப் புள்ளியியல் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்), வினோதன் (லண்டன்), யதீசன் (ஆசிரியர்), செந்தீரன் (பொறியியலாளர், கொழும்பு), கேதீரன், தர்சினி (லண்டன்), ரமணன் (லண்டன்), ஜெயரஞ்சினி (லண்டன்), மகாலட்சுமி (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை), பிரபாகரன் (லண்டன்), சுரேன் (பொறியியலாளர், திருகோணமலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவடினி (லண்டன்), திரிசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2005) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(சி-40713) (24-18)

இல. 88, குறுக்குத் தெரு,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
க.ஆனந்தராசா (மகன்).

# சுழிபுரம் மதுபானசாலை அனுமதியை ரத்துச் செய்யவும்

## பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.31

சுழிபுரம் பிரதான சந்தியில் அமைக்கப்படவுள்ள மதுசாலைக்கான அனுமதியை இரத்துச் செய்யுமாறு சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அரச அதிபர், மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மதுபானச்சாலை அமைக்கப்படவுள்ள இடத்திற்கு அண்மையில் விக்ரோறியாக் கல்லூரி, ஐக்கிய சங்க வித்தியாசாலை மற்றும் பல்வேறு பொதுமக்கள் கூடும் இடங்கள் அமைந்துள்ளன.

பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் மற்றும் பொது அமைப்பினர் கவனம் எடுத்துச் செயற்படுமாறு கேட்கின்றோம் - என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (3-202)

## விசேட வங்கிக்கடன்

வலிதென்மேற்குஜன31

யாழ். சுகாதாரத் திணைக்களத்திலும் யாழ். மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளிலும் பணிபுரிந்து வரும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு விசேட வங்கிக்கடன் வழங்கப்படவுள்ளது.

இக்கடனைப் பெற விரும்புபவர்கள் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது நிறுவனத் தலைவருக்கு ஊடாக விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால்
பதக் கமும் பாராட்டுப்பத்திரமும் வழங்கிக்
கௌரவிக்கப்பட்ட எமது மாணவ மணியை,
கல்லூரியின் அத்தியாரதினமாகிய இன்று
வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழையமாணவர் சங்கம்,
தர்மகர்த்தாசபை,
யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி,
புத்தூர்.

க.பொ.த. [உ/த] 2004 - கலை
மாவட்டநிலை 02
தேசியநிலை 07

செல்வி
ம.வதனகீர்த்தனா

## வாணிப நிலையத் திறப்புவிழா அழைப்பு

உ

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் தைத்திங்கள்
18 ஆம் நாள் இன்று (31.01.2005) திங்கட்கிழமை
சுபநேரம் காலை 5.00 மணிக்கு (ப.நே.)
வரும் சுபமுகூர்த்தத்தில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள

### விவா மின்பொருள் இரும்பு வாணிபம்

என்னும் நிலையத்தைக் கண்டி வீதி, கைதடிச் சந்தி, கைதடியில்
திறந்துவைக்க இறைவன் திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம்
எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

உரிமையாளர்
திரு.ச.சசிக்குமார், திருமதி ச.குகந்தினி

## கண்ணீர் அஞ்சலி



அமரர் LION K.செல்வரட்ணம்
அமரர் LION LADY S.நாகராணி

மானிப்பாய் பரிஸ் லயன் கழக 1997 - 1998 காலப்பகுதித் தலைவரும்
தற்பொழுது அங்கத்துவப் பணிப்பாளரும் நீண்டகால அங்கத்தவருமாகிய
இவர்கள் இருவரும் 27, 28-01-2005 ஆம் திகதிகளில்
இயற்கையெய்தியமையையிட்டு அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு
எமது கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
இருவரினதும் ஆத்மாக்கள் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் பரிஸ் லயன் தலைவர் லயன் சி.சிவராஜேஸ்வரனும்,
கழக அங்கத்தவர்களும்.

(சி-40721) (46-24-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னிக் கிராமத்தில் ஆற்றுப் பாலங்கள் இல்லை

## இதனால் மக்கள் பெரும் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஜன.31

ஒட்டுசுட்டான் பண்டாரவன்னிக் கிராமத்தில் உள்ள ஆறுகளுக்குக் குறுக்கே பாதுகாப்பான பாலங்களை அமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியுள்ளனர்.

பண்டாரவன்னிக் கிராமத்தில் உள்ள குறிப்பிட்ட சில ஆறுகள் வருடாவருடம் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

இதனால் அந்தக் கிராமத்தில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது பாலங்கள் இல்லாமையால் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வெளியேறமுடியாத நிலைக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே, உரியவர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு அப்பகுதிகளில் உள்ள ஆறுகளுக்குக் குறுக்காக பாலங்களை அமைத்துத் தருமாறு அக்கிராம மக்கள் கோரியுள்ளனர்.

அப்பகுதியில் உள்ள எல்லா ஆறுகளுக்குக் குறுக்காகவும் உடனடியாகப் பாலம் அமைக்க முடியாவிடினும் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒரு பாலத்தையாவது அமைத்துத் தருமாறு அவர்கள் மேலும் கோரியுள்ளனர். (த-203-341)




# ஒட்டுசுட்டான் மருந்தகம் இயங்காததால் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஜன.31

ஒட்டுசுட்டான் மருந்தகம் இயங்காமையினால் அப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த 5 வருடகாலமாக இந்த மருந்தகம் இயங்காது உள்ளமையால் இப்பகுதி மக்கள் சாதாரண நோய்களுக்குரிய சிகிச்சைகளைப் பெறுவதற்கும் திலீபன் மருத்துவமனைக்கே செல்லவேண்டியுள்ளது.

அத்துடன், அவசர நோயாளர்கள் 12 மைல்லுக்கப்பால் உள்ள வைத்தியசாலைக்கே செல்லவேண்டியுள்ளது.

எனவே, மேற்படி வைத்தியசாலைப் புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்தி மீண்டும் மிக விரைவில் இந்த வைத்தியசாலையை இயங்கச்செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-203-341)

# புதுக்குடியிருப்பு கூ.சங்கத்தில் கிராமிய வங்கிக் கிளை திறப்பு

புதுக்குடியிருப்பு,ஜன.31

புதுக்குடியிருப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பணிமனையில் கிராமிய வங்கிக்கிளை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த வங்கிக்கிளைத் திறப்பு விழா கடந்த 27ஆம் திகதி நெறியாளர் குழு உறுப்பினர் வி.சர்வானந்தராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை நெறியாளர் குழு உறுப்பினர் செ.தனபாலசிங்கமும் கூட்டுறவுக் கொடியைக் கூட்டுறவுத் திணைக்களப் பிராந்தியக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவல் அ.மரியாம்பிள்ளையும் ஏற்றி வைத்தனர்.

கிராமிய வங்கிக் கிளையைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மோ. சிவமயம் நாடாவெட்டிச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது கூட்டுறவாளர் கிராமிய வங்கி இது என்பது குறிப்பிடத்தக்கது. (த-353-202)

# சுனாமியில் பெற்றோரைப் பறிகொடுத்த சிறுவர்களுக்கு ஜேர்மன்வாசி பண உதவி

புதுக்குடியிருப்பு,ஜன.31

சுனாமி பேரலையால் பெற்றோரை இழந்த 30 சிறுவர்களுக்கு ஜேர்மனியில் வசிக்கும் அன்பர் ஒருவர் பண உதவி செய்துள்ளார்.

இவரால் வழங்கப்பட்ட 3 லட்சம் ரூபா நிதி தலா 10ஆயிரம் ரூபா வீதம் அச் சிறுவர்களின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான வைப்புப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் சமாசத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அந்த வைப்புப் புத்தகங்களைச் சிறுவர்களுக்கு வழங்கினார். (த-353-202)



ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையத்தில் அண்மையில் சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளையும் ஏனைய விவசாயிகளையும் படத்தில் காணலாம். *(படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

# சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு ஒட்டுசுட்டானில் அஞ்சலி நிகழ்வு

ஒட்டுசுட்டான்,ஜன.31

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வுகள் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் தயா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புரட்சி நிலவன் தேசியக் கொடியை ஏற்றினார்.

மகாவித்தியாலய துணை அதிபர் வி.நிர்மலாதேவி பொதுச்சுடரினை ஏற்றினார். தொடர்ந்து இறந்தவர்களுக்காக, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவுரைகளை, கற்சிலைமடு அ.த.க.பாடசாலை முதல்வர் பொ.அருமைச்சந்திரன், முத்தையன்கட்டு இடது கரை அ.த.க.பாடசாலை முதல்வர் ந.கருணாகரன், ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன், வீலது கரை அ.த.கபாடசாலை ஆசிரியை இ.நந்தினி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய துணை அதிபர் வி.நிர்மலாதேவி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-341-204)

## வீதி விபத்துகள் தொடர்பாக மாணவருக்குக் கருத்தூட்டல்

கிளிநொச்சி,ஜன.31

கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களுக்குத் தமிழீழக் காவல்துறையினர் வீதிப்போக்குவரத்துப் பிரிவினரால் வீதி விபத்து தொடர்பான கருத்தூட்டல் வகுப்பு நடத்தப்பட்டது.

பாடசாலை முதல்வர் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தூட்டல் வகுப்பில் வீதிப்போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாகத் தமிழீழக் காவல்துறையினர் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமாரன் கருத்துகளை வழங்கினார்.

அத்துடன், ஆசிரியர்கள் தினமும் மாணவர்களுக்கு வீதிப்போக்குவரத்துத் தொடர்பான அறிவைப் புகட்டவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் இரவு நேரங்களில் நடமாடும் மாணவர்களுக்கு வெளிச்சத்தெறிக் கைப்பட்டிகள் வழங்கப்பட்டன. (த-203)

## முல்லை. செயலகத்துக்கு மேலதிக அரச அதிபர்

புதுக்குடியிருப்பு,ஜன.31

முல்லைத்தீவு செயலகத்திற்கு மேலதிக அரச அதிபராக க.சண்முகலிங்கம் கடந்த 24 ஆம் திகதிமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராக இருந்து ஓய்வுபெற்றவர். (த-353-202)

## புதுமுக மாணவர் வரவேற்பு

ஒட்டுசுட்டான்,ஜன.31

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

புதிய மாணவர்களைத் தரம் 2 மாணவர்கள் உளமார மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர். ஆசிரியர்களும் இணைந்து புதுமுக மாணவர்களை வகுப்பறைக்குக் கூட்டிச்சென்றனர். (த-341-204)

★ ★ ★


பூநகரி,ஜன.31

பூநகரி பள்ளிக்குடா அ.த.க.பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் விழா கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

புதுமுக மாணவர்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. அவர்கள் ஆலயங்களுக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

அதிபர், ஆசிரியர்கள் ஏனைய மாணவர்கள் சூழ வகுப்பறைகளுக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர்.

இந்நிகழ்வில் பெற்றோர்கள், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மேலாளர் அச்சுதன், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் யோ.பிரான்சிஸ், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-403)



சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கடந்தவாரம் விசுவமடுப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிட்டிருப்பதை முதலாவது படத்திலும், அங்கு கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:பரந்தன் செய்தியாளர்)*

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel.:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road, Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road, Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street, Colombo-13 Tel.:2430782 Fax:2430782
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

# உயிரிழந்தோருக்கு பூநகரியிலும் அஞ்சலி

பூநகரி,ஜன.31

'சுனாமி' கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான துக்கதினம் பூநகரிப் பிரதேசத்திலும் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை பூநகரி வாடியடிப் பகுதியில் பூநகரி பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை பூநகரி பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமார் ஏற்றிவைத்தார். இரங்கல் உரைகளை பூநகரி மகாவித்தியாலய அதி[illegible] பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை பூநகரிப் பங்குத்தந்தை [illegible] அல்ஸ்ரோங், பூநகரிப் பிரதேச அரசியல துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.(த-202-403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் இரு பாடசாலை அதிபர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

## ஜனாதிபதியின் உத்தரவின் பேரில்

கொழும்பு,ஜன.31

தெற்கில் இருபாடசாலை அதிபர்களை உடனடியாக வேலையிலிருந்து இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தரம் ஒன்றில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் காலி மலியதேவ பெண்கள் பாடசாலை அதிபரையும் -

மதுபோதையில் மாணவர்களுக்கு ஆபாசப் படங்களைக் காண்பித்தார் என்ற குற்றச்சாட்டில் மொறட்டுவக் கல்லூரியின் அதிபரையும் - வேலையிலிருந்து உடனடியாக இடைநிறுத்தும் உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார். இடைநிறுத்தப்பட்டுள்ள பாடசாலை அதிபர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கல்வி அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதேவேளை, தேசியப் பாடசாலைகளில் மாணவர்களை உள்ளீர்ப்பது தொடர்பான அறிக்கையினை அடுத்தவாரத்திற்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். (3-203-13)

# பண்டத்தரிப்பு கூ.சங்கத்தில் நிவாரணவிநியோகம்

வலி.தென்மேற்கு,ஜன.31

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிவாரணப் பொருளகள் இவ் வாரம் முதல் வழங்கப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட சுமார் 457 குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு மற்றும் சீனி உட்பட நிவாரணப் பொருள்கள் இச்சங்கத்தின் கிளைகள் மூலம் வழங்கப்படவுள்ளதாக பொதுமுகாமையாளர் சு.வைரவநாதர் தெரிவித்தார். (த-5-135)

# தொல்புரம் வைத்தியசாலையில் சிற்றூழியர்கள் பற்றாக்குறை

தொல்புரம்,ஜன.31

தொல்புரம், பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலையில் சிற்றூழியர் பற்றாக்குறை நிலவி வருகிறது.

தொல்புரம், மூளாய், சுழிபுரம், வட்டுக் கோட்டை கிழக்கு, சித்தன்கேணி ஆகிய கிராம மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வைத்தியசாலை தான் பெரிதும் உதவுகிறது.

அதுமட்டுமன்றி, கர்ப்பிணிப் பெண்களின் "கிளினிக்" கும் இங்கு நடைபெறுகிறது. இருந்தும் ஒரேயொரு சிற்றூழியர் மாத்திரமே இங்கு கடமையாற்றுவதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, மேலும் சில சிற்றூழியர்களை இவ் வைத்தியசாலைக்கு நியமித்தால் நோயாளர்களின் அசௌகரியங்கள் நீங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-ரி)



கொழும்பில் நடைபெற்ற 130 ஆவது உலக அஞ்சல் தினவிழாவின்போது, தேசியமட்டத்தில் சிறந்த அஞ்சலாளராகத் தெரிவுசெய்யப்பட்ட ஊர்காவற்றுறை தபால் அலுவலகத்தில் கடமையாற்றும் சவரிமுத்து தேவதாசன் என்பவருக்கு அஞ்சல் தொலைத்தொடர்பு, மலையக அபிவிருத்தி அமைச்சர் தி.மு.ஜயரட்ண விருது வழங்குவதைப் படத்தில் காணலாம். பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தனவும் படத்தில் உள்ளார்.

# சண்டிலிப்பாய் கோட்ட விளையாட்டுப் போட்டி

வலிதென்மேற்கு,ஜன.31

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

துடுப்பந்தாட்டப் போட்டி இன்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கரப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை வலைப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி பண்டத ரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (த-135)

# சங்கானை மயானத்தை புனரமைக்க நிதி வழங்குவதாக உறுதிமொழி

சங்கானை, கரைச்சி மயானப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி நிதியை ஒதுக்கித் தருவதாக நாடளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மயானம் புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் அரைகுறைக் கட்டடமாகக் கட்டப்பட்டுள்ள மயான மண்டபத்தைப் பூரணமாகக் கட்டிமுடிப்பதற்கு நிதிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் சங்கானை தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்தே அவர்கள் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரே இந்நிதி ஒதுக்கீட்டினைச் செய்துதருவதாகத் தெரிவித்துள்ளனர். (த-203-29)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பூலோகத்தில் 20 - 03 - 1928



சிவலோகத்தில் 01 - 01 - 2005

### திருமதி தங்கம்மா கனகரத்தினம்

அன்புக்கும் பண்புக்கும் ஆதரவாய் இருந்தீர்
பாசத்துக்கும் நேசத்துக்கும் உறைவீடமாயிருந்தீர்
முப்பத்தொரு நாளாச்சோ எமைவீட்டுப் பிரிந்து
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இன்று (31.01.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.* (45496)

மக்கள் (ரவிமில்), மருமக்கள் (R.T.R. தொலைத் தொடர்பகம்), பேரப்பிள்ளைகள்.


# நெடுந்தீவுக் கடலில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

நெடுந்தீவு,ஜன.31

கடந்த சில நாள்களாக நெடுந்தீவுப் பிரதேச கடற்பரப்புக்குள் மீண்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்து வருகின்றன என்று கூறப்படுகின்றது. தங்கிநின்று தொழில்புரியும் குல்லா வள்ளங்களிலும் றோலர் படகுகளிலும் கிழமை நாளகளில் மாறிமாறி வரும் இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக் கரைக்கு மிகவும் அண்டியதான பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இப்பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களை இழக்கநேரிடுவதுடன் தொடர்ந்து தொழிலில் ஈடுபடமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

அத்துடன் சில சந்தர்ப்பங்களில் பெரிய படகுகளில் வரும் இந்திய மீனவர்களினால் தமது கடற் பிரதேசத்தில் வைத்து தாம் அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் இப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய மீனவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாகவும் உரியவர்களிடமும் முறையிட்டுள்ளதாகவும் இப்பகுதி மீனவப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளளனர். (த-112)


## செங்கட்டிகள் தேவை

ஒரு தொகை செங்கட்டிகள் உடன் தேவை.

தொடர்பு:
ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் திருக்கோயில்
வண். வடமேற்கு,
(சி-40727) ஆனைக்கோட்டை.



## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய
*இந்திரகுமார்*
(SAT.TECH. ENGINEER, KOKUVIL)
அவர்களின் அருமைத் தந்தையார்

### அமரர் கார்த்திகேசு தம்பு

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நாம் மிகவும் வேதனையும் துயரமும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் வேதனையிலாழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*182, கே.கே. எஸ். வீதி,*
*குளப்பிட்டிச்சந்தி,*
*கொக்குவில்.*

உறவினர்களும் நண்பர்களும்.

(41493)(24-29-45)



## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு தம்பு (புளியங்கூடல்)



புளியங்கூடலைச் சேர்ந்த கார்த்திகேசு தம்பு அவர்கள் நேற்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் புலேந்திரன், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (ஈசன்) மற்றும் ஜெயமலர் (குஞ்சு), சிவகுமார் (குணா ஐஸ்கீறம், மல்லாகம்), இந்திரகுமார் (Sats Tech Engineer, கொக்குவில்), சந்திரகுமார், தவமலர் (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காந்திமதி, சரஸ்வதி, சிவராசா, விஜயலக்ஷ்மி குபேந்திரராணி, மதிவதனி, சகாதேவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீதரன் (துஷாரா கொமினிக்கேஷன், புளியங்கூடல்), ஜெயகரன் (தீபன் - லண்டன்), கண்ணன், ஜெயகரன், மயூரன், தர்ஷா, சிவசித்ரா, சித்திரலேகா, சங்கீதா, ஜனனி, வினேஸ், வினோகா, குணேஸ், ஜிந்துஜா, பிரசாந்த், நிரோஜா, வினோஜன், கரன், சயன், பபிகரன் ஆகியோரின் பாசமிகு பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கட்டுவன் வீதி, மல்லாகத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுவன் வீதி,*
*மல்லாகம்.* (41494)(29-45)

தகவல்:
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபகரணங்களை இழந்த மீனவருக்கு நிவாரணம் வழங்க ரூ. 300 கோடி ஒதுக்கீடு

வடமராட்சி,ஜன.31

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த கால யுத்தத்தின் போது கடற்றொழில் உபகரணங்கள், வீடுகள் மற்றும் சொத்துக்களை இழந்த மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க 300 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்நிவாரணம் பெப்ரவரி மாதம் வழங்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் கடற்றொழில் நீரியல் வளதிணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜி.பியசேன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் மீனவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பாக ஆராயவென நேற்று யாழ். வருகை தந்த இவர், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்றார். இக்கலந்துரையாடலில் நீரியல் வள திணைக்களப் பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டுவரை யுத்தங்களால் பாதிக்கப்பட்டுத் தொழில்களை இழந்த மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்கனவே விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. அதன்பிரகாரம் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். இதற்கான நிதியை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

சுனாமியால் ஏற்பட்ட சேதவிவரங்களை தந்தால் அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும். வடக்கு-தெற்கு என்றபேதமின்றி அனைத்து நிவாரணமும் சமனாகப்பங்கிடப்படும்.

குடாநாட்டு மீனவர்களின் நிலைமைகளை ஆராய இனி மேல் மாதம் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் இணைப்புக்குழுக் கூட்டம் நடத்தப்படும் - என்றார்.

பணிப்பாளர் நாயகத்தினால் மாவட்ட அனர்த்தங்களுக்கான முகாமைத்துவக் குழுக்கள் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்துக்குத் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் கேதர்மலிங்கம் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(எ-173)

# ஜனாதிபதி தலைமையில் இன்று சமரசச் சந்திப்பு

கொழும்பு,ஜன.31

அரசின் பங்காளிக் கட்சிகளான சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கு மிடையில் உருவாகியுள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணும் சமரசச் சந்திப்பு இன்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளது. இரு கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துவரும் கருத்துக்களால் உருவாகியுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் நோக்கில் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறும் இச் சந்திப்பில் இரு கட்சிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

(க-10)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜன.31

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரசசேவை கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் விரைவில் நடத்தப்படவுள்ள முக்கிய சந்திப்புக்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்படும் என்றும்-

சகல அரசசேவை கீழுழைப்புப் பட்டதாரிகளையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறும் சங்கத்தின் செயலாளர் கு.பற்குணராஜா அறிவித்துள்ளார். (எ)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் குடாநாட்டுக் கரையோரப்பகுதி மாணவர்களுக்கு தமிழ் மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் ஒருதொகுதி கல்வி உபகரணங்களை கையளித்தது. நல்லூரில் உள்ள அதன் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாணவி ஒருவருக்கு உபகரணங்கள் கையளிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பார்த்தீபன்)







## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## மகாதேவன் சதீஸ்

(பணியாளர், உதயன் நிறுவனம்)

தோற்றம்: 28.05.1978 | மறைவு: 18.12.2004

திதி: ஸப்தமி



18.12.2004 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்பு மகன், சகோதரனின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரில் பங்குகொண்டு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய, கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட அயலவர்களுக்கும், உதயன் நிறுவனத்தினருக்கும், இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (31.01.2005) திங்கட் கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

தனித்தனி அழைப்பு அனுப்ப இயலாமைக்கு வருந்துகிறோம்.

உடையார் ஒழுங்கை, மொறம்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

(41552)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

தோற்றம் 25 - 02 - 1943 | மறைவு 09 - 02 - 1992



## அமரர் முத்துத்தம்பி இரத்தினவேலு (சந்தணம்)

திதி: 31.01.2005

ஆண்டுகள் பதின்மூன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்.
என்றும் எம்மை விட்டகலாத எம் தெய்வமே!
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேர்த்தி, பேரன்

சேச் லேன்,
கூளாவடி,
ஆனைக்கோட்டை. (41498)

## மில் வேலை ஆள் தேவை

அனுபவம் உள்ள மில் வேலை தெரிந்தவர் உடன் தேவை. கவர்ச்சகரமான சம்பளம் வழங்கப்படும்.

சாந்தி கிறைண்டிங் மில்
இல.50, பலாலி றோட், (எரிபொருள் நிலையம் முன்பாக), திருநெல்வேலி. (41554)

## ஒப்படைத்துதவவும்

மு.சிவாஜினி, ச.றஞ்சினி ஆகியோரின் தே.அ.அட்டைகள், நிரந்தர பயண அட்டை, தருமபுரம் அரசினர் வைத்தியசாலைத் தொழில் அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்.கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 077 6327693 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது
இல.70, கஸ்தூரியார் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (41500)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

பாலர் வகுப்பு (காலை) நடைபெறுகின்றது.
ஆங்கிலம் மட்டும். ஆங்கில மூலம்.
பதிவுக்கு:- தலைமை ஆசிரியர்,
விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426, (302), K.K.S.வீதி,
யாழ்ப்பாணம். (41497)

## விற்பனைக்கு

சட்டநாதர் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள ஜெகன் வீடியோ ஓடியோ சென்ரரில் நல்ல நிலையிலுள்ள AIWA, AKAI றெக்கோடிங் கெசற டெக், Sony T.V (மொடல் No 20,32 20,90), Pana Sonic டீவீடி (DVD) பிளேயர், மோட்டோறோலா கானபோன், PIONEER டெக் செற், SHARF வீடியோ டெக் என்பன விற்பனைக்குண்டு.
மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (41457)
T.P.: 0777 042716

## நிறைஞ்சனாஸ் சங்கானை



பார்த்தீபன், நிச்சா பட்டேல், வடிவேலு மற்றும் பலர் நடித்த
காதல் கிறுக்கன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.) (C/40667)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா (ரீலஸ்) இயக்குநர் ஹரி



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த
ஆயுதம்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)



நாளைமுதல் மகாநடிகன்

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.) (C/39654)


# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை மேரித்திரேசா

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மேரித்திரேசா நேற்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் மரியபாலன் (கனடா), அன்னபுஸ்பம் (கனடா), திருமகள் (பண்டத்தரிப்பு), சுதா (கனடா), தவபாலன் (இந்தியா), ஜெயராணி (இந்தியா), மரினா (ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தயாபரன் (கனடா), பாலேந்திரன் (பண்டத்தரிப்பு), சிவா (கனடா), அடைக்கலம் (இந்தியா), வாசிசன் (ஊர்காவற்றுறை), சுகந்தா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நியூட்டன், சஜித், நிறோஜா, கஹஸ்ரிகா, நிறோஜினி, கிருசாந்தினி, தீபா, சம்சன், நிஷா, ஜெனி, அருண், லக்சனா, பிரசாந்தினி, பிரகாஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2005) செவ்வாய்க் கிழமை பி.ப. 3.00 மணிக்கு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் அந்தோனியார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அந்தோனியார் வீதி,
பண்டத்தரிப்பு.
(41553)

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமதி தங்கமுத்து தில்லையம்பலம்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திருமதி தங்கமுத்து தில்லையம்பலம் நேற்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வ.கிருஷ்ணப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற திரு.திருமதி வே.வீரகத்தி அவர்களின் அன்பு மருமகளும் வீ.தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)அவர்களின் அன்பு மனைவியும் பகீரதன், அமரர் பகீரதி, பாரதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவாஜினியின் அன்பு மாமியாரும் திருமதி சரஸ்வதி நடராசா, வைத்திய கலாநிதி தவராசா (U.S.A), திருமதி செல்வராணி விநாயகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாலசுந்தரம், கிருஷ்ணப்பிள்ளை, விநாயகமூர்த்தி, திருமதி தவமணிதேவி தம்பிக்கண்டு, நடராசா, திருமதி புவனேஸ்வரி தவராசா,விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.01.2005) திங்கட் கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'கிருஷ்ணவாசா,'
விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,
கரவெட்டி மேற்கு. (41551)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரு ஜயசூரிய திருமலை விஜயம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

முதலில் வீரநகர், சங்கமித்த, விஜயபுரம், சிலோன் ஜெற்றி, ரீ.ரீ.ஏ. ஜெற்றி ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களின் குறைகளை அக்குழுவினர் கேட்டறிந்துகொண்டனர். அப்போது பெரும்பாலான மக்கள் தமக்கு இதுவரை அரச நிவாரணம் முழுமையாகக் கிடைக்கவில்லை என்று அக்குழுவினரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தபோதும் அவை இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கரு ஜயசூரிய தலைமையிலான குழுவில் முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.அஸ்வர், ஜெனரல் வீரசூரிய ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடத்த அரச அதிபர் காமினி ரொட்றிகோவுடனான கூட்டம் ஒன்றிலும் இக்குழுவினர் கலந்துகொண்டனர்.

இதன்போது மக்கள் தெரிவித்த கருத்துக்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. அதற்கு அரச அதிபர் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பிரதேச செயலாளர்கள் மூலமாக உரிய நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் - இதற்கு மேலாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் கூப்பன் அட்டைகளும் வழங்கப்பட் டுள்ளன என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:-

பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகள் மற்றும் பொருள்களைக் கிராமசேவையாளர்கள் சரியான முறையில் வழங்குவதில்லை எனவும் சில இடங்களுக்கு அவர்கள் உரிய வேளைகளில் செல்வதுமில்லை எனக் குறை கூறினார்.

நிவாரணப் பொருள்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன என ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப்படுகின்றது. இந்த உதவிகளைத் தென்பகுதி மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், எமது பகுதி மக்களுக்கு இதுவரை சரியாக வழங்கப்படவில்லை. இவற்றுக்குக் காரணம் அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கே என்றும் -

குற்றஞ்சாட்டினார் சிவாஜிலிங்கம் எம்.பி.

(க-10)





சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தோரின் ஆன்ம சாந்திக்காக நோர்வே நாட்டில் நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

# உரும்பிராயில் விளையாட்டு வீரர்கள் கைகலப்பு

யாழ்ப்பாணம்.ஜன.31

விளையாட்டு மைதானத்தில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற கைகலப்பில் சிலர் காயமடைந்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது. இச்சம்பவம் உரும்பிராய் மேற்கு மூன்று கோயிலடி திருக்குமரன் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தை அறிந்த கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்று மாலை குறித்த மைதானத்தில் இடம்பெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் இரு வீரர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்ததாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்களும், வீரர்களும் மைதானத்தின் வடக்குப் புறத்தில் இருந்த மிதிவெடி அபாய எச்சரிக்கைக் கம்பங்கள், குறியீட்டுப் பலகைகள் என்பவற்றைப் பிடுங்கி எடுத்து மோதலில் ஈடுபட்டனர். (10-49-13)

# உடத்தலவின்ன படுகொலைகள் குறித்து அனுருத்த 10ஆம் திகதி வாக்குமூலம்

கொழும்பு.ஜன.31

உடத்தலவின்ன படுகொலைகள் வழக்கின் முதலாவது எதிரியான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ட்ரயல் அட்பார் முன்னிலையில் வியாழனன்று சாட்சிக் கூட்டிலிருந்து சாட்சியம் அளிக்கவிருக்கின்றார்.

அவரது சாட்சியத்தின்போது அவரை அரச தரப்புச் சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்வார்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி நடத்த பொதுத் தேர்தலின்போது கண்டி உடதத்லவின்னப் பகுதியில் வைத்து பத்து முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த வழக்கின் பிரதான மூன்று எதிரிகளாக அனுருத்த ரத்வத்த அவரது புதல்வர்களான ரொஹான் ரத்வத்த, லொஹான் ரத்வத்த உட்பட 16 சந்தேகநபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தப் 16 பேர் மீதும் 72 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல் அட்பார் விசாரணை எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகளில் எரிக் பசநாயக்க நீதியரசராக பதவியுயர்வு பெற்று மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நியமனம் பெற்றுள்ளார். இதனால் ஏனைய இரு நீதிபதிகளான சுனில் ராஜபக்ஷ, தீபாலி விஜேசுந்திர ஆகியோர் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொள்வர்.

அனுருத்த ரத்வத்த சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணியும், எம்.பியுமான விஜேதாச ராஜபக்ஷ ஆஜராகுகிறார். (எ-க)

## நீர்கொழும்பில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொலையாளிகள் கொலைக்கு ரி.56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் பொலீஸார் கூறுகின்றனர். சம்பவம் தொடர்பாக அவர்கள் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-க-13)

## முல்லை. மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதில் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரட்ணம், முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-13)

## தமிழர் புனர்வாழ்வுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை ஆட்சேபித்த தமிழர் புனர்வாழ் வுக் கழகம் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுகளை நடத்தியது. அதைத்தொடர்ந்து விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டி ருந்த நிவாரணப் பொருள்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன், வெளிநாடுகளிலிருந்த பொருள்களைத் தருவிக்கும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் வரிசையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெயரும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அரச கட்டுப்பாடற்ற தமிழ்ப் பகுதிகளில் 17 வருடங்களுக்கு மேலாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேவையாற்றி வருகின்றது. 178 கிளைக்களின் ஊடாக அதன் செயற்பாடுகள் நடைபெறுகின்றன எனத் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் முக்கியஸ்தர் சந்துரு பரராஜசிங்கம் தெரிவித்தார். ஓர் அரசார்பற்ற நிறுவனமாக அது இலங்கைக் சட்டங்களின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. (க-10)

## மாற்றத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் பற்றுறுதியுடனும், திடசங்கற்பத்துடனும் செயற்பட்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முயல வேண்டும்.

விடுதலைப் புலிகளும், தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களும் அரசு மீது குற்றஞ்சாட்டி வருகின்றனர். பிரச்சினைகள் இருப்பினும் அவை பேசித் தீர்க்கப்படல்வேண்டும். இரு தரப்பும் அதற்கு முன்வரவேண்டும்.

பேச்சைத் துரிதப்படுத்த வேண்டியது காலத்தின் தேவை. அதை யாராலும் மறுக்க முடியாது. நாடு சந்தித்த இந்தப் பெரும் அழிவில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என அனைவரும் கொல்லப்பட்டனர். பாதிக்கப்பட்ட அனைவரையும் இலங்கையர் என்ற ரீதியிலேயே நான் பார்க்கிறேன். நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. புலிகளையும் இணைத்துக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம் - என்றார் பிரதமர். (க-10)

(மற்றொரு செய்தி [illegible])


## திருமணக் கார்

* இச்சேவையை ஒழுங்குசெய்யும் விடுதிகளுக்கும் தொலைத்தொடர்பு நிலையங்களுக்கும் கமிஷன் வழங்கப்படும்.
* குளிரூட்டப்பட்ட சொகுசுக்கார், சில்வர் நிறம்
* திருமண சேவைக்கும்
* முக்கிய பிரமுகரின் (VIP) பயன்பாட்டிற்கும் மட்டும் உரியது. (வரையறுக்கப்பட்ட தூரங்களிற்கு)

தொடர்பு: தொ.பே.இல. 222 6286

0777 283795

(மேற்படி இலக்கங்களைக் குறித்து வையுங்கள்)

(41254)(26-11-17)

City & Guilds

யாழ் மாணவர்களே!

குறுகிய காலத்தில் நீங்களும் Chartered Engineer ஆகலாம்

Chartered Engineering Part II / Final year Admission U.K. Universities

ADV. DIPLOMA

1st year admission U.K Universities Chartered Engineering Exam Part I

(6 Months)

DIPLOMA LEVEL

(6 Months)

CERTIFICATE or A/L

(6 Months)

G.C.E O/L

June 2005

பரீட்சைக்கான வகுப்புக்கள்

Electrical & Electronic Engineering

Telecom. systems Engineering

வார/வாரஇறுதி வகுப்புக்கள்

ஆரம்பம்:07-02-2005

(மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)

Course Director:

K.Chandirabose I.Eng. MIIE

பரீட்சைகள்; City & Guilds London நிறுவனத்தினரால் கொழும்பிலும் கண்டியிலும் நடத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

Jaffna Technical Institute

07,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.

T.P: 021-2223335

APSS International

(Approved centre by City & Guilds)

57,E.S. Fernando Mw,Colombo - 6

T.P:011-2361587/2506803

Country Office: City & Guilds South Asia Pvt (Ltd)

Access Tower, 278 Union Place, Colombo - 02. T.P: 5361427/8

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.

பதிவுகள் 03/02/2005 இற்கு முன் நேரில்

MCS

இலவசக்கணனிப்பயிற்சி

324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP


# மரண அறிவித்தல்கள்



## லயன் கார்த்திகேசு செல்வரட்ணம்

*(இளைப்பாறிய நில அளவை அதிகாரி, மானிப்பாய் பரீஸ் லயன் கழக உறுப்பினர், ஆனைக்கோட்டை சம்பந்தப்பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா)*

## லயன் சீமாட்டி செல்வரட்ணம் நாகராணி

பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை வடக்கைச் சேர்ந்த கா.செல்வரட்ணம், செ.நாகராணி ஆகியோர் 27,28-01-2005 இல் காலமானார்கள்.

அன்னார்கள் காலஞ்சென்ற திரு.திருமதி கார்த்திகேசு தம்பதியரின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்ற திரு.திருமதி குமாரசுவாமி தம்பதியரின் புதல்வியும் ஆவர்.

இவர்கள் காலஞ்சென்ற தியாகராசா, விக்னேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர், பிலியந்தலை) ஆகியோரின் சகோதரனும், மைத்துனியும் சிவனம்மா, தவரட்ணம் ஆகியோரின் சகோதரியும் சகோதரனும் மைத்துனியும் முரளீதரன் (Norway), அருணன் (U.K.), மணிமாறன் (U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தை, தாயாரும் காந்திமதியின் வளர்ப்புத் தந்தை, தாயாரும் சுகந்தி, சிவானி, கமலினி ஆகியோரின் அருமை மாமன், மாமியாரும் அஞ்சலன், அஜந்தன் ஆகியோரின் அருமைப் பேரனும் பேர்த்தியும் ஆவர்.

அன்னார்களது இறுதிக்கிரியைகள் அவர்களின் இல்லத்தில் இன்று (31-01-2005) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல்கள் ஆனைக்கோட்டை காக்கைதீவு, கரையாம்பிட்டி இந்துமயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*பிள்ளையார் வீதி,*
*ஆனைக்கோட்டை வடக்கு,*
*ஆனைக்கோட்டை.*

தகவல்:
சகோதரன், பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.

*(41460)(26-11-17)*

## செல்லத்துரை றாஜினி (தபீத்தாள்)

பூநாறிமரத்தடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு, செல்வபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை றாஜினி (தபீத்தாள்) அவர்கள் நேற்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (பத்தர்) - யோகேஸ்வரி (மேரி) அவர்களின் அன்பு மகளும் ரவிச்சந்திரன் (நிக்ஷன், ஜோய் நகை மாடம்), ரவிராஜன் (எசேக்கியேல்), றஜனி (தெபொராள்), ரவீந்திரன் (யூட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிந்து (ரூத்) அவர்களின் மைத்துனியும் ஜோய் நிசான், றோய் நிசான், றொக்ஷானா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.01.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் பி.பகல் 3.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வபுரம்,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
செ.ரவிச்சந்திரன்
(ஜோய் நகை மாடம்).

(41555)(30-11-17)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.